
சைவ முன்னேற்றச் சங்கம்
UNITED KINGDOM
கலசம்

“ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்”

# கலசம்
# KALASAM

ஆடி - ஆவணி - புரட்டாதி - 2022

SAIVA MUNNETTA SANGAM
21.6.77
UNITED KINGDOM



ISSN 2055-6616

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

MSR GROUP
EST 2005

# MSR GROUP

Chartered Management Accountants

OUR SERVICES:

- Accounting & Business Services
- Tax Consultancy
- Tax Investigation
- Locums & Umbrella Payroll
- Property Consultancy
- Mortgages
- Pension & Investment
- Insurance
- Will & Probate Services

CELEBRATING 15 YEARS OF EXCELLENCE
2005 - 2020

The Parliamentary Review
BEST PRACTICE REPRESENTATIVE

Best Practice Representative
Selected by Parliamentary
Review

Head office:
MSR House, 329 Ley Street
Ilford
Essex
IG1 4AA

Regional office:
MSR Chamber, 349 Ley Street
Ilford
Essex
IG1 4AA

Contact:
T: 020 8514 2678
F: 020 8514 6963
E: office@msrgroup.org.uk
W: msrgroup.org.uk

மணி 30

# கலசம்
KALASAM

ஒலி 103

www.saivamunnettasangam.com

Charity Registration No:292085

FREE ISSUE

# மறையும் இசை மரபுகள்

திருக்கோயில்களிலும் திருமணங்களிலும் மங்கல இசை இருப்பது நமது மரபில் உள்ளது. அந்த இசையை வழங்குபவர்கள் நாகசுர, தவில் கலைஞர்கள். திருக்கோயிலில், திருமணங்களில் ஒவ்வொரு நிகழ்விலும் என்ன இராகம் வாசிக்கவேண்டும் என்றும் ஒரு மரபு இருக்கிறது. உதாரணமாக, திருமணத்தில், மாப்பிள்ளை பெண்ணின் கழுத்தில் மங்கலநாண் அணியும்போது நாட்டைக்குறிஞ்சி இராகம்தான் வாசிப்பார்கள். அதுபோல மாப்பிள்ளை அழைப்பு, பெண் அழைப்பு என்று ஒவ்வொன்றுக்கும் வாசிப்பதற்கென்று ஒரு முறை உண்டு. ஆனால் இப்போதைய திருமணங்களில் பிரபலமான திரையிசை அல்லது ஏதாவது சுலோகம் ஓதும் இசையே ஒலிபரப்பப்படுகின்றது.

கோயில்களிலும் என்ன இசை வாசிக்கிறார்கள் என்று கேட்பதனால், வெளியில் இருந்தாலும் உள்ளே என்ன நடக்கிறது என்பதை அறியலாம். "மல்லாரி" வாசித்தல் கோயிலிலே உள்ள இசை மரபில் ஒன்று. இது கம்பீரநாட்டை இராகத்தில் அமைந்திருக்கும். அபிஷேகம் நடக்கும்போது, திருவமுது எடுத்து வரும்போது, பூரண கும்பம் சுற்றிவரும்போது, தேருக்குச் சுவாமி வரும்போது, வீதி வலம்வரப் புறப்படும்போது என ஒவ்வொன்றுக்கும் வாசிக்கும் முறை உண்டு.

அது தவிர, முன்பெல்லாம் நல்ல நல்ல கீர்த்தனைகள் வாசிப்பார்கள். சுத்தமான இசை கேட்பதற்கென்றே பலர் கோயில்களுக்குப் போவதுண்டு. இலங்கையில் பல கோயில்களில் விடியும்வரை திருவிழாக்கள் நடைபெறும். திருவாவடுதுறை இராஜரத்தினம் பிள்ளை, காருகுறிச்சி அருணாசலம் முதல் பிற்காலத்தில் பத்மநாதன் சிதம்பரநாதன் வரை பல வித்துவான்கள் கோயில்களில் தரமான இசை வழங்கியுள்ளார்கள்.

ஆனால், இப்போது காலம் மாறிவிட்டது. திரை இசையில் மக்கள் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். மக்கள் கேட்கிறார்களேயென்று இசைக் கலைஞர்களும் திரையிசையே வாசிக்கிறார்கள். அதனால் பண்ணிசை, தமிழிசை மரபுகள் மெல்ல மறைந்துவருகின்றன. திருமணநிறைவில் திரையிசையை ஓரளவு ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் கோயில்களில்?

இப்படியே போனால், நாளடைவில் நல்ல கீர்த்தனைகள், தேவாரம் - திருப்புகழ் ஆகியவை மறந்து; மறைந்துவிடும். ஆத்தாடியும், அம்மாடியுந்தான் கோயில்களிலும் திருமணங்களிலும் ஒலிக்கும்.

**க. ஜெகதீஸ்வரன்**
**ஆசிரியர்**

**கலசம்**
**நிருவாகக் குழு**

**ஆசிரியர்**
க ஜெகதீஸ்வரன்

**உதவி ஆசிரியர்கள்**
சி அற்புதானந்தன்
சுதர்சினி வாகீசன்

**விநியோகம்**
சோ நிரஞ்சன்
சு இரத்தினராஜா

**விளம்பரம் நிருவாகம்**
மா இந்துசேகரன்
வ இ இராமநாதன்

**இலங்கைத் தொடர்பு**
வை சிவனருட்செல்வர்
**தொலைபேசி**
0766167547
**மின்னஞ்சல்**
svarul@yahoo.co.uk

**வெளியீடு**
சைவ முன்னேற்றச் சங்கம்

**முகவரி**
SMS
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Tel:
020 8514 4732

**மின்னஞ்சல்**
email:
smsukkalasam@gmail.com

# இந்த இதழில்


உயர்ந்த குடியினரின் வீழ்ச்சி - கந்தபுராணச் சிந்தனைகள் 03

102 ஆவது கலசம் - வாசகர் பார்வையில் 05

சிற்றுயிர்கள் வழிபட்ட சிவத்தலங்கள் 06

“கலசமே செல்வம்” 07

எள்தீபம் ஏற்றும் முறை 07

மனக்கவலை மாற்றும் மருந்து 08

திருக்காளத்தி - பயணக் கட்டுரை 09

பசி 13

இந்துசமயமும் வாழ்வியலும் 16

பாஞ்சாலி சபதம் 26

திருக்குறள் கதைகள் 29

அருகிவரும் பாரம்பரியக் கலைகள் 31

கேள்வி - பதில் 38

கலைமகள் தரிசனம் 42

ஆன்மிக அதிசயங்கள் 44


அட்டைப்படம்: வடிவமைப்பு - குகன்

கட்டுரைகளில் உள்ள கருத்துக்களுக்குக் கட்டுரையாளரே பொறுப்பாவர்

# உயர்ந்த குடியினரின் வீழ்ச்சி

## கந்தபுராணச் சிந்தனைகள்

கலாநிதி ச சிவலோகநாதன்

சூரன் சிவபெருமானை நோக்கிக் கடுமையான வேள்விகளைச் செய்து பெருவரங்களைப் பெறுகிறான். அசுர குலம் முழுவதுமே செல்வச் சிறப்பினால் போகமான வாழ்வை அநுபவிக்கிறது. அசுரகுலத்தின் உயர்நிலையினை, செல்வச் சிறப்பினை வீரவாகுதேவர் காண்கிறார். “பற்றினை ஒழித்த துறவியாக இருந்தாலும், இச்செல்வத்தைச் சொல்லளவில் கேட்டுணர்ந்தாலும், ஆசை கொண்டு அசுரர் ஆவதற்குத் தவத்தைச் செய்வர். இவர்களை அல்லாத மற்றவர் செயல்பற்றிச் சொல்வதென்ன? உலகத்திலே மிக வளம் கொண்ட இந்த நகரத்தைப் பெருந்தவம் செய்தவரே காண்பார்” என்று வீரவாகுதேவர் நினைக்கின்றார்.

விளைவு மாற்றிய தவத்தின ரேனுமிவ் வெறுக்கை
மொழியி னோரினும் அவுணரா கத்தவம் முயல்வார்
ஒழியும் ஏனையர் செய்கையை உரைப்பதென் னுலகிற்
கழிபெ ரும்பகல் தோற்றவ ரேயிது காண்பார்

-நகர்புகு படலம் *54*

இவ்வாறு மிக உயர்ந்த நிலையிலே இருந்த அசுரர் குலம் கிளையோடு அழிக்கப்பட்டது. இதற்குக் காரணம் என்ன என்பதை ஆராய்ந்தால், ஒழுக்கக் கேட்டாலும் நீதிநெறி கடைப்பிடிக்காததாலுமே ஏற்பட்டது என்பது புலனாகும்.

அரசாட்சி செய்துகொண்டிருந்த சூரன் பின்வருவதை உணராது இந்திராணி மீது ஆசை கொள்கிறான். அதனால் இந்திரனைச் சிறையிலடைத்துவிட்டு இந்திராணியைக் கவர்ந்து வர அசுரகுலப் பெண்களையும் ஒரு சேனைத் தலைவனையும் பணிக்கிறான். இந்திரன் இந்திராணியுடன் ஓடிப்போய்ப் பூலோகத்தில் மறைந்து வாழ்கிறான். சூரனுடைய ஒற்றர்கள் இந்திரனையும் இந்திராணியையும் தேடுகிறார்கள். கடைசியாகச் சூரனின் தங்கை அசமுகியின் கண்களில் இந்திராணி தென்பட்டுவிடுகிறாள். இந்திராணியைக் கவர்ந்து செல்ல முயன்ற அசமுகியின் கையை மாகாளர் வெட்டிவிடுகிறார். அசமுகி சூரனிடம் சென்று முறையிடுகிறாள். சூரன் கோபங்கொண்டு பானுகோபன்மூலம் இந்திரனின் நகரை அழித்து, இந்திரனின் மகன் சயந்தனையும் தேவர்களையும் சிறையிடுகிறான். இதுவே யுத்தத்திற்கான முக்கிய காரணம்.

சூரன் அரசு செய்யத் தொடங்கிய காலத்திலேயே, ஒரு நாள், கடலிலுள்ள மீன்களைப் பிடித்து அசுரகுலத்தவர் அனைவருக்கும் ஒவ்வொரு நாளும் விநியோகிக்கும்படி தேவர்களுக்குக் கட்டளையிட்டான். தேவர்களும் வேறுவழியின்றி அவ்விழிதொழிலை நெடுங்காலம் செய்தனர். சூரன் யுத்தத்தின்பொருட்டு மந்திராலோசனை நடத்தியபோது, சிங்கமுகாசுரன் இதனை நினைக்கிறான். “மன்னா! ‘தேவர்கள்’ எல்லோரையும் கடலில் உள்ள மீன்களைப் பிடித்துவரும்படி அனுப்பினாய். இவ்வாறு செய்வது நன்றா? தம் உயிரில் விருப்பமில்லாதவரன்றி யார் இந்தச் செயலைச் செய்வார்?” என்று கூறுகிறான்.

தேவர்கள் யாரையும் திரைகொள் வேலையின்
மேவரு மீன்தொகை விரைவிற் றம்மென

ஏவினை இனிதுகொல் இனிய செய்கைதம்
மாவியில் விருப்பிலார் அன்றி யார் செய்வார்

-சூரன் அமைச்சியல் படலம் 96

இதே போன்று சூரன் தேவர்களுக்குச் செய்த கொடுமைகள் பலவும் சிங்கமுகாசுரனால் கூறப்படுகின்றன. தேவர்கள் சூரனால் தமக்குற்ற துன்பம் தாங்காது கைலையிலே சோமாஸ்கந்தராக வீற்றிருந்த சிவபெருமானை, சூரனை அழிக்கும்படி வேண்டினர். அப்போது, "பூலோகத்தை வருத்தி அங்கேயுள்ள உயிர்கள் எல்லாவற்றுக்கும் துன்பத்தைத் தந்து, தேவர்களது சொர்க்கபுரியை அழித்து, தீமைகளையே செய்துகொண்டிருக்கும் பெருவன்மை கொண்டுள்ள சூரனை, அசுரக் கூட்டத்தோடு அழித்து, வேத நெறியினை நிலைநிறுத்தி, இந்திரனது சிறந்த அரசாட்சியினை அவனுக்குத் திருப்பித் தந்து, தேவர்களது துன்பத்தை நீக்கி, அதன் பின்பு இங்கே திரும்பி வருக" என்று எம் தந்தையாகிய சிவபெருமான் முருகப்பெருமானுக்குச் சொன்னார்.

பாரினை அலைத்துப் பல்லுயிர் தமக்கும்
பருவரல் செய்து விண்ணவர்தம்
ஊரினை முருக்கித் தீமையே இயற்றி
யுலப்புறா வன்மை கொண்டுற்ற
சூரனை அவுணர் குழுவொடுந் தடிந்து
சுருதியின் நெறிநிறீஇ மகவான்
பேரரசழித்துச் சுரர் துயர் அகற்றிப்
பெயர்தி என்றனன் எந்தை பெருமான்

- விடைபெறு படலம் 35

இவற்றினைப் பார்க்கும்போது சூரன் குலத்தோடு மாள, இந்திராணியின்மீது மேற்கொண்ட மோகமும், தேவர்களுக்கிழைத்த கொடுமையுமே காரணமாகத் தெரிகின்றன. இதன்மூலம் நம்முடைய குலம் வாழவேண்டுமானால், ஒழுக்கமாக வாழ்தலையும் நீதி நெறிகளைக் கடைப்பிடித்தலையும் குலத்திலுள்ள ஒவ்வொருவரும் செய்யவேண்டுமெனக் கந்தபுராணம் காட்டும் சைவத் தமிழ்க் கலாசாரம் சொல்லா நிற்கிறது.

# அழித்தல்

"அழித்தல்" என்றதன் பொருள் இல்லாமற் செய்தல் என்று மட்டுந்தான் நாம் நினைக்கின்றோம். அது தவறு. அழித்தல் என்றால் ஒன்றை இன்னொன்றாக மாற்றுதல் என்றும் பொருள்படும். விஞ்ஞானத்தில், "Matter can neither be created nor destroyed" என்பார். ஒன்று இன்னொன்றாக மாறுமேயன்றி அழிவதில்லை.

பாரதியார்கூட, "தனியொருவனுக்கு உணவில்லை எனில் செகத்தினை அழித்திடுவோம்" என்றார். செகம் என்று அவர் குறிப்பிடுவது தரிசு நிலங்களையன்றி உலகத்தையன்று. உலகத்தை அழிப்பதனால் நமக்கு என்ன பயன்? விளையா நிலங்களைப் பசுமையான விளையும் நிலங்களாக மாற்றுவோம்; செழிப்படையச் செய்வோம் என்பதே பாரதியின் எண்ணமாக இருக்கவேண்டும். எனவே "தரிசு நிலங்களை அழித்து செந்நெற் களனிகள் ஆக்கிடுவோம்" என்பதே பாரதியின் கனவு.

***பாரதியார் பற்றிய உரையில், 05.05.2022 அன்று, தியானம் அவையில் முனைவர் சங்கரநாராயணன்***

# 103 ஆவது கலசம்

## "ஒரு வாசகரின் பார்வையில்"

ஆசிரியர் தலையங்கத்தில், கோயில்களுக்குச் செல்பவர்கள் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதை வற்புறுத்தியுள்ளீர்கள். அது முற்றும் உண்மையே! எமது கோயிலுக்கு வரும் பெரும்பாலான இளம் பெண்கள், நடுவயதுப் பெண்கள் எல்லோரும் தலைவிரி கோலமாகவும் ஆடை ஆபரணங்களை ஆடம்பரமாகவும் அணிந்துகொண்டே வருகிறார்கள். நாகரிகம் என்ற பெயரில், தாங்கள் எங்கு போகிறோம், எதற்காகப் போகிறோம் என்பதை மறந்து கோயிலுக்கு வருகிறார்கள். தங்களை மற்றவர்கள் குறைத்து மதித்துவிடுவார்கள் என்ற எண்ணம் தலைதூக்கி நிற்கின்றது. சுவாமியின் அலங்கார அழகை இரசிப்பதைவிட வரும் பெண்களின் கோலத்தைப் பார்க்கவே ஆண்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது. டாக்டர் வரதராசனார் தனது ஆக்கங்களில் ஆடம்பர வாழ்க்கை எப்படி ஒரு சமூகத்தைச் சீரழிக்கிறது என்று சுட்டிக்காட்டுகிறார். வசதிகள் இருக்கும்பொழுதும் எளிய வாழ்க்கை வாழப் பழகவேண்டும்.

"ஆணை நமதே" என்ற கட்டுரையில், ஆசிரியர், திருஞானசம்பந்தர் தேவாரங்களை ஒரு புதிய முறையில் அணுகி ஆராய்ந்துள்ளார். அதுபோல "மெய்ஞ்ஞானக்கல்வி" என்ற கட்டுரையில் திருவாசகம், திருமந்திரம், திருக்குறள் ஆகிய ஒப்பற்ற மூன்று நூல்களின் பாடல்களை எடுத்து, கட்டுரையாளர் சைவசித்தாந்தத் தொடர்பை அழகாக விளக்கியுள்ளார்.

அடுத்து வரும் கட்டுரைகளில் கதைகள் மூலம் ஆன்மிக உண்மைகளைப் பின்னணியாக வைத்து எழுத்தாளர்கள் தந்திருக்கும் ஆக்கங்கள் என்னை மிகவும் கவர்ந்துவிட்டன. உதாரணமாக, பசுவும் புலியும் பற்றிய "கந்தபுராணச் சிந்தனைகள்" பகுதியில் வந்த கதை அரிச்சந்திரனின் நாடகத்தை நினைவுபடுத்தியது. வாக்குத் தமவறாமல் நடப்பது உலகியலிலும் சரி, வாழ்க்கையிலும் சரி எவ்வளவு முக்கியம் என்பதைக் கட்டுரையாளர் படம்பிடித்துக் காட்டியுள்ளார். "பாஞ்சாலி சபதம்" நாங்கள் படிக்கும் காலத்தில் பாடப்புத்தகமாக இருந்தது. எனினும் பாரதக் கதையுடன் இணைத்து விளக்கி எழுதியிருப்பது நன்றாக இருக்கிறது. துரியோதனன் போன்று இன்று "புட்டின்" என்ற சர்வாதிகாரி எவ்வளவு கொடுமைகளைச் செய்கிறான்? ஆணவச் செருக்கும் பொறாமைக் குணமும் ஒரு நாட்டை எப்படிச் சீரழித்துக்கொண்டிருக்கின்றன?

"யோகசுவாமிகளின் சிந்தனைகள்" எத்தனைதரம் படித்தாலும் சலிக்காது. மாறாக, எங்கள் ஆன்மிக உணர்வை மேலோங்கச் செய்யும். அடுத்து, "தானமும் தருமமும்" என்ற கட்டுரை. மிகவும் நன்றாக உள்ளது. கல்விகற்கும் ஒரு சிறுமி இப்படி எழுதுவது போற்றத்தக்கது. "ஆனாயநாயனார்" சரித்திரமும் மற்றைய கட்டுரையும் சிந்தனைக்குரியவை. ஒவ்வொரு கட்டுரையிலும் நுட்பமான கருத்துக்களைப்பற்றி எழுதினால் கடிதம் நீண்டுவிடும். சுருக்கமாகச் சொல்வதென்றால், எல்லாமே சிறந்த ஆன்மிகக் கருத்துக்களை உள்ளடக்கி இருக்கின்றன.

நிறைவாக, "கண்ணனும் தாத்தாவும்" தொடர் இந்த இதழுடன் நிறைவடைவது கவலையாக இருக்கின்றது. நான் தவறாமல் வாசிப்பது இந்தக் கதையைத்தான். குழந்தைகளுக்கும் பெரியோருக்கும் நல்ல போதனை தரும் தொடர் இது. தாய்நாட்டில் A/L படிக்கும் பிள்ளைகள் வாசித்தால் நல்ல பயனடையலாம். கல்லூரிகள், நூல்நிலையங்களுக்குக் கலசம் இதழ் கிடைக்கச்செய்தால் மிகவும் நன்று.

# சிற்றுயிர்கள் வழிபட்ட சிவத்தலங்கள்

| | | |
|---|---|---|
| 1. | அணில் - | குரங்கணில் முட்டம் (காஞ்சிபுரம்) |
| 2. | ஆமை - | திருமணஞ்சேரி |
| 3. | யானை - | திருவானைக்கா, காளத்தி, கோட்டாறு, பெண்ணாடகம், திருக்கானப்பேரூர். |
| 4. | ஈ - | ஈங்கோய்மலை |
| 5. | எறும்பு - | திருவெறும்பூர் |
| 6. | கரிக்குருவி - | மதுரை, வலிவலம் |
| 7. | கழுகு - | திருக்கழுக்குன்றம், புள்ளிருக்குவேளூர் |
| 8. | கருடன் - | சிறுகுடி |
| 9. | கழுதை - | கரவீரம் |
| 10. | காகம் - | குரங்கணில் முட்டம் (காஞ்சிபுரம்) |
| 11. | குதிரை - | அயவந்தி |
| 12. | குரங்கு - | குரங்குக்கா, குரங்காடுதுறை, குரங்கணில் முட்டம் (காஞ்சிபுரம்) |
| 13. | சிங்கம் - | திருநல்லூர் |
| 14. | சிலந்தி - | காளத்தி, திருவானைக்கா |
| 15. | தவளை - | ஊற்றத்தூர் |
| 16. | நண்டு - | திருந்துதேவன்குடி (திருவிசலூர் அருகில்) |
| 17. | நாரை - | திருநாரையூர் |
| 18. | பசு - | திருவாமாத்தூர், ஆவூர், பெண்ணாடகம் |
| 19. | பன்றி - | சிவபுரம் |
| 20. | பாம்பு - | காளத்தி, திருநாகேசுவரம், நாகப்பட்டினம், குடந்தைக் கீழ்க்கோட்டம், திருப்பாம்புரம் |
| 21. | புலி - | எருக்கத்தம்புலியூர், ஓமாம்புலியூர், திருப்பாதிரிப்புலியூர், பெரும்பற்றப்புலியூர், பெரும்புலியூர் |
| 22. | மயில் - | மயிலாப்பூர், மயிலாடுதுறை |
| 23. | மீன் - | திருச்செந்தூர் |
| 24. | முயல் - | திருப்பாதிரிப்புலியூர் |
| 25. | வண்டு - | திருப்பருப்பதம் (ஸ்ரீசைலம்), திருவெண்துறை, வாள்கொளிபுத்தூர் |

# கலசமே செல்வம்

கலச இதழ் பக்தியிலே தனித்துவம் ஆகும் - உலகில்
பக்திக்கென்று பவனி வரும் சரித்திரமாகும்
எண்ணங்களின் படைப்போடு வண்ணங்களின் வெளிப்பாடு
அன்புத்தமிழ் சொந்தமென கலசமே தோன்றும்
ஆன்ம அறிவு தமிழ் பந்தமெனக் கலசமும் தோன்றும்
சொந்தம் எனப் பந்தம் எனக் கலசமே தோன்றும்
சைவ நெறிக் கருத்தோடு கட்டுரைகள் நாடும்
தெள்ளு தமிழ் மக்களுக்கு இறை உணர்வூட்டும்
இறை சார்ந்து வரும் படைப்பும் புது நெறிகாட்டும்
வாசிக்கவும் யோசிக்கவும் கலசமே கோயில்
நேர் முகங்கள் பலவாக நேர்த்தியுடன் உரையாடல்
பார்ப்பதற்கே அரியதோர் புகைப்பட கலசம் இதைப்
பார்த்தவுடன் படிப்பதற்கு ஆவலைத் தூண்டும்
சுத்தத் தமிழ் பிரவாகம் பக்தி மணம் பலவாகும்
இல்லம் தனை கோயில் எனக் கலசமே மாற்றும்
உண்மை பக்திநெறி பரவசத்தை கலசமே கூட்டும்
படிப்பதற்கும் காப்பதற்கும் கலசமே செல்வம்.

- இராஜகவி

# எள்தீபம் ஏற்றும் முறை



**சனைச்சர பகவானுக்கு எள்தீபம் ஏற்றுவது சரியா? தவறா?**

நாம் பலகாலமாக எள்தீபம், அதாவது எள்ளின் மூலமாக வருகின்ற நல்லெண்ணெயில் சனைச்சர பகவானுக்கு விளக்கேற்றி வழிபட்டு வருகிறோம். இது பழங்காலந்தொட்டு வந்த பழக்கவழக்கம். ஆனால் சமீபகாலமாக ஆலயங்களின் வாசலில், எள்ளை ஒரு வெள்ளைத் துணியில் பொட்டலம் கட்டி, அகல் விளக்கில் வைத்து எண்ணெய் விட்டு இறைவனுக்கு விளக்கேற்றுவது நடைமுறையாக வந்துள்ளது. அது சரியா? தவறா? என்று பார்த்தால், நிச்சயமாக அது தவறு. ஏனெனில், அரிசியைப் போல எள்ளும் ஒரு தானியம் தான். நாம் அரிசியை எரித்து இறைவனுக்குப் படைப்போமா? இல்லை.

அதேபோலத்தான், எள்ளை அரைத்து அதன் மூலம் வரும் எண்ணெயை, அதாவது நல்லெண்ணெயைத்தான் இறைவனுக்கு விளக்கேற்றப் பயன்படுத்த வேண்டும். எள்ளை நேரடியாக எரித்து இறைவனுக்கு காணிக்கையாகப் படைத்தல் கூடாது. நமது காலத்தில் வாழ்ந்த காஞ்சிப் பெரியவர் கூட இதுபற்றிச் சொல்லியிருக்கிறார். அதனால், எள்ளை எரித்து இறைவனை வழிபடப் பயன்படுத்தாது நல்லெண்ணெயை விளக்கேற்றப் பயன்படுத்துங்கள். இது தோஷ நிவர்த்திக்கு நல்ல வாய்ப்பு. எள்ளை எரித்தால் கூடுதலான பாவம் தான் வந்து சேரும்.

# மனக்கவலை மாற்றும் மருந்து

நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாள்தோறும் சாற்றினால் - முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தான்நினைத்த எல்லாம் தரும்

திருமுருகாற்றுப்படை மனக்கவலை மாற்றும் மருந்து!

திரு என்பது கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம். முருகன், முருகையுடையவன். முருகு என்பது இளமை, தெய்வத்தன்மை, மனம், அழகு. ஆற்றுப்படை என்பது கூத்தர் முதலியவர்களில் ஒருவர் ஒரு கொடையாளியின்பால் தாம் பெற்ற பெருஞ் செல்வத்தை, எதிர்வந்த இரவலர்களுக்கு அறிவுறுத்தி, அவரும் அவன்பாற் சென்று தாம் பெற்றவற்றை எல்லாம் பெறுமாறு வழிப்படுத்தல். ஆறு = வழி, படை = படுத்தல்.

திருவருள் பெற்ற நக்கீரர், தாம் “பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்” என்று நமக்கு அளித்த மங்காத செல்வம் திருமுருகாற்றுப்படை. நக்கீரர் நல்வழி காட்டி! அவர் முருகனைத் தேடிச் செல்வார்க்கு முதுகில் ஒரு தட்டுக் கொடுத்து வழி அனுப்புகிறார்.

“முருகனைத் தியானிக்கும் உள்ளம், நன்மையே செய்கின்ற சங்கற்பம், நெஞ்சில் நினைத்தன முருகன் அருட்பேறு. இதோ முருகன் அள்ளிக் கொடுத்து விடுவான்” என்று முருகன் பால் அடியார்களை வழிப்படுத்துகிறார் நக்கீரர்.

“சேவடி படருஞ் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையும்
செலவு நீ நயந்தனை ஆயின், பலவுடல்
நன்னர் நெஞ்சத்து இன் நசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே”

நிலையான வீடுபேறு விரும்புவார்க்கு,

“மணங்கமழ் தெய்வத்து இளநலங் காட்டி
அஞ்சல் ஓம்புமதி அறிவல்நின் வரவென
அன்புடை நன்மொழி அளைஇ விளிவு இன்று
இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து
ஒருநீ யாகித் தோன்ற விழுமிய
பெறலரும் பரிசில் நல்குமதி”

என்றெல்லாம் கூறி முருகன்பால் ஆற்றுப்படுத்துகின்றார்.

**திரு. செ.தனபாலசிங்கம் இயற்றிய “ஆறுமுகமான பொருள்” (1961) என்னும் நூலிலிருந்து.**
**வெளியீடு: உரும்பராய் ஸ்ரீ சிதம்பர சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்.**

# திருக்காளத்தி

## பயணக்கட்டுரை

சாவகச்சேரியூர் Dr க கதிர்காமநாதன்

திருப்பதியா? திருக்காளத்தியா? எங்கு முதலில் போவது? இரு தலங்களுக்கும் இடையே 40 கி.மீ தூரம் இருப்பதால் ஒரே நாளில் தரிசிக்கலாம். திருப்பதி ஒரு புண்ணியதலம். திருக்காளத்தி பரிகாரத்தலம்; சிவத்தலமுமாகும். பரிகாரத்துக்குச் சென்று பின்னர் புண்ணிய தலத்துக்குச் செல்வதுதான் வழக்கமாகும். ஆதலால் திருக்காளத்திக்கு முதல் புறப்படுவது முறையாகும்.

**திருக்காளத்தி வரலாறு:**

ஒரு காலத்தில் ஆதிசேடனுக்கும் வாயு தேவனுக்கும் கயிலை மலையை யார் பெயர்த்தெடுப்பது எனப் போட்டி நிகழ்ந்தது. முடிவில் வாயுதேவன் வென்று மூன்று சிகரங்களாகப் பெயர்க்க, அவை தெற்கே விழுந்தன. ஒன்று திருக்காளத்தி, மற்றையது கும்பகோணத்தில் இருக்கும் வெள்ளையங்கிரிமலை. மூன்றாவது சிவபூமி என்னும் இலங்கையில் இருக்கும் திருக்கோணமலையில், பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான திருக்கோணேஸ்வரம் ஆகும். இவை மூன்றும் தட்சிண கயிலாயங்கள் என்பது குறிப்பிடத்தக்கது. திருக்காளத்தி சீகாளத்தி என்றும் சொல்லப்படுகிறது. சீ + காளம் + அத்தி - முறையே, சீ - சிலந்தி, காளம் - பாம்பு, அத்தி - யானை. இந்த உயிர்கள் வழிபட்டு முத்தியடைந்ததால் தலம் இப்பெயர் பெற்றது என்பர். தற்போது காளத்தி என்ற பெயரால்தான் ஆலயம் குறிப்பிடப்படுகிறது.

**தலத்தின் பெருமை:**

பஞ்ச பூதத் தலங்களில் இது ''வாயு'' தலமாகும். வாயுதான் ஏனைய பூதங்களிலும் பார்க்க அதிக சக்தியுடையதாய் கருதப்படுகின்றது. ஆமாம்! எமது மூச்சுப் போன பின் பேச்சே இல்லையே!

இராகு, கேது க்ஷேத்திரம் எனக் குறிப்பிடப்பட்டு, பரிகாரத் தலமாக இது பிரகாசிக்கிறது. “அன்புதான் இறைவனை அடைய வழி” என மானசீகமாய், இங்கு வழிபட்டு முத்தியடைந்த கண்ணப்பரை யார் தான் மறப்பார்? “அட்டமாசித்திகள் அணைதரு காளாத்தி” என சிறப்பிக்கப்படும் இத்தலம் நக்கீரரால் “கயிலை பாதி காளத்தி பாதி” எனப் பாடப்பட்ட பெருமை பெற்றது. நதி-நிதி-பர்வதம் என்ற கூற்று வழக்கத்தில் வாழ்கிறது. நதி - சுவர்ணமுகி, நிதி - சிவன், பார்வதி, பர்வதம் - கைலாசகிரி. சுவர்ணமுகி இங்கு வடக்கு முகமாகச் செல்வதால் உத்தரவாகினியாவது விசேடம். சமயகுரவர் நால்வராலும் பாடப்பெற்ற தலம்.

*இறைவன்:* ஸ்ரீ காளஹஸ்தீஸ்வரசுவாமி, காளத்திநாதர், குடுமித்தேவர்.
*இறைவி:* ஞானப்பிரசுனாம்பிகை, ஞானப்பூங்கோதை.
*தலமரம்:* மகிழ்
*தீர்த்தம்:* சுவர்ணமுகி என்ற பொன்முகலியாறு

செண்டாடும் விடையாய் சிவனே என் செழுஞ்சுடரே
வண்டாருங் குழலால் உமைபாக மகிழ்ந்தவனே
கண்டார் காதலிக்கும் கணநாதன் எங்காளத்தியாய்
அண்டா உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே

\- சுந்தரர்

**தரிசனம்:**
தொண்டை நாட்டு மலை அடிவாரத்தில் உள்ள, ஆந்திர மாநிலம், சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்தது.



**காளிகோபுரம்:** திராவிட பாணியில், நிமிர்ந்து நிற்கும் வெள்ளைநிற, ஏழு நிலை கொண்டு சுவர்ணமுகி நதியைப் பார்த்தபடி இருக்கும் இக்கோபுரம் தூரத்தில் இருந்தே பார்க்கத் தெரியும். அடியாரை வரவேற்பதுபோல் அமைந்துள்ளது. பரந்த பூமியில் கோபுரங்களையும், சிவலிங்கங்களையும் மூர்த்திகளையும் கொண்ட ஆலயம் இது.

**பாதாள கணபதி:**
வெளிப்பிரகாரத்தில் இவரை முதலில் தரிசித்தோம். முதற்கடவுள் நிலமட்டத்திற்கு முப்பது அடிக்குக் கீழே வீற்றிருக்கிறார். குறுகிய இருபது படிகள் மூலம் சென்று வாசலை அடைந்தவுடன் குனிந்துதான் உட் செல்ல முடியும். ஒரே சமயத்தில் இருபது பேர் மட்டும் தரிசிக்க முடியுமான சிறுகோயில். பாதாள விநாயகர் பொன்முதலி ஆற்றின் மட்டத்தில் காட்சியளிக்கின்றார் எனக் கருதப்படுகிறது. ஒரு சமயம் அகத்தியர் இவரை வழிபடாமல் ஆலயத்தை மாத்திரம் வழிபட்டுச் சென்றார். இதனால் ஆற்றின் நீர் வற்றியது. தவறை உணர்ந்து பின்னர் வணங்கியதால் பொன்முகலி ஆறு பெருகியது.

காளி கோபுரத்தின் பின்னர் பிஷசால கோபுரம் உளது. அடுத்து, வலப்பக்கத்தில் உள்ள கோபுரம் திருமஞ்சனகோபுரம். இங்கு இருந்து பார்த்தால் நேரே பொன்முகலி ஆறு தெரியும், இதை அடைவதற்குப் படிக்கட்டுக்கள் உள்ளன. இவ்வழியே தான் அன்பின் சின்னமாகிய கண்ணப்பர் பொன்முகலி ஆற்றின் நீரை எடுத்துச் சென்று அபிடேகம் செய்ததாக கூறப்படுகிறது.

> கண்ணப்பன் ஒப்பது ஓர் அன்பு இன்மை கண்ட பின்
> என் அப்பன், என் ஒப்பு இல்என்னையும் ஆட்கொண்டருளி
> வண்ணப் பணித்து என்னை வா என்ற வான் கருணை
> சுண்ணப் பொன் நீற்றற்கே சென்று ஊதாய் கோத்தும்பி

என மாணிக்கவாசகர் கண்ணப்பரின் அன்பைப் போற்றுகிறார்.

**பொருள்:**
கண்ணப்பரின் ஈடு இணையற்ற அன்புக்குச் சமமாக என்னிடம் அன்பு இல்லை என்று கண்டும், என்னையும் வாவென்று அழைத்துத் தன் கருணையால் ஆட்கொண்ட இறைவனிடம் சென்று சொல்வாய் அரசவண்டே! கண்ணப்ப நாயனார், அசைவ உணவை உண்டாலும், திண்மையான, பரிசுத்தமான அன்பால் இறைவனை அடையலாம் என்பதற்கு ஒரு உதாரணமானவர்

பலவித சிற்பங்கள், மூர்த்தங்கள் யாவையும் பார்த்து வணங்கி ஈற்றில் பாதாள ஆலயம் அடையலாம். வாசலில் ஒரே கல்லால் அமைக்கப்பட்ட 60 அடி உயர கொடிமரம், கவசமிட்ட கொடிமரம் இரண்டையும் கண்டு வணங்கலாம்.

தட்சண கோபுரம்தான் பிரதான கோபுரம். மேற்கு நோக்கிய சந்நிதி. தங்கக் கவசமணிந்து காளத்திநாதர் காட்சியளிக்கிறார். பார்ப்பதற்கு பட்டைகள் போன்று தோன்றுபவை நவக்கிரகங்களைக் குறிக்கும். மேலும், இக்கவசத்தில் 27 நட்சத்திரங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கவசத்தை சாத்தும் போதும், எடுக்கும் போதும் லிங்கத்தின் மீது கைகள் படக்கூடாது.

சுயம்பு தீண்டாத் திருமேனியாக காளத்திநாதர் அருள் பாலிக்கின்றார். உயர்ந்த லிங்கத்தின் அடிப்பாகத்தில் சிலந்திவடிவம், மத்தியில் யானையின் இரு தந்தங்களும், மேற்புறத்தில் ஐந்து தலை நாகமும் உள்ளன. வலப்பக்கத்தில் கண்ணப்பர் கண் அப்பியவுருவும் அழகுற அமைந்துள்ளது. சந்நிதியில் கண்ணப்பரின் மூலத் திருமேனி உண்டு.



காளத்திநாதர் முன்புறம், கதவருகில் உள்ள இரு தீபங்கள் அசையும் நிலை கண்டு ஆனந்திக்கலாம். "வாயுத் தலம்" அல்லவா! பசுமையாக பசுமரத்தாணிபோல இது என் மனதில் பதிவாகியுள்ளது. கோஷ்ட மூர்த்திகளாக கணபதி, தட்சணாமூர்த்தி, இலிங்கோத்பவர், பிரம்மா, துர்க்கை அமைந்துள்ளனர்.

கண்ணப்பர் அபிடேகம் செய்த தலமாதலால் இங்கு திருநீறு கொடுக்கும் வழக்கம் இல்லை. பச்சைக் கர்ப்பூரத்தைப் பன்னீர் சேர்த்து அரைத்து, தீர்த்தத்தில் கலந்து சங்கு ஒன்றில் வைத்துக் கொடுப்பது வழமை. அர்த்தசாம பூசை செய்வது இல்லை. சாயரட்சைப் பூசையோடு பூர்த்தி. இரவு 8 மணிக்குப் பள்ளியறை சேர்ப்பு.

அம்பாள் ஞானப்பூங்கோதை. அம்மனின் 51 சக்தி பீடங்களில் இது ஞானசக்தி பீடம் கிழக்கு நோக்கிய சந்நிதி. அழகான கருவறை. எதிரில் சிம்மம். நின்ற திருக்கோலம். இரு கரங்கள். இடுப்பில் ஒட்டியாணத்தில் "கேது" உருவமுள்ளது. கோஷ்ட மூர்த்தங்கள் யாதும் இல்லை. அம்பாளின் திருவடியில் ஆதிசங்கர பகவத் பாதரால் பிரதிட்டை செய்யப்பட்ட "அர்த்தமேரு" உள்ளது. வெள்ளிக்கிழமை தோறும் தங்கப்பாவாடை அணியப்படுகிறது. அத்தினத்தில் ஊஞ்சல் உற்சவம் நடைபெறுகிறது.

திருக்காளத்தியில் நவக்கிரகங்கள் இல்லை. விதிவிலக்காக சனிச்சரன் மட்டும் பிரசன்னமாகி இருக்கிறார்.

**இராகு, கேது பரிகாரம்:** இவை இரண்டுமே நவக்கிரகங்களில் அதி சக்திவாய்ந்தவை. பரிகாரம் தேட மக்கள் இங்கு படையெடுத்து வருகின்றனர். இராகுகேது, சர்ப்பதோஷம், திருமணத்தடை, திருமணம் பின்போடல், பிள்ளைப்பேறு இன்மை, முன் கர்மவினை தீர்த்தல். வேலை இன்மை போன்றவற்றைத் தீர்க்க கும்பலாக மக்கள் இங்கே வருகின்றனர்.

முன் இரவே தங்கி, நீராடி, காலையிலோ, மாலையிலோ செல்லல் வேண்டும். முதலில் பாதாள விநாயகரைத் தரிசிப்பது சிறந்தது. நேர அட்டவணைப்படி தேர்ந்து கலந்து கொள்ளலாம். சீட்டு விவரங்கள் 250 ரூபாவிலிருந்து 5000 ரூபா வரை உள்ளது. ஒரு சீட்டில் இருவர் அனுமதிக்கப்படுவர். சீட்டுக்கு ஏற்ப இடமும், தேவையான பூசைப் பொருள்களும் கொடுக்கப்படும். பரிகார பூசை 45 நிமிடங்கள் நடைபெறும். முடிவில் இராகு கேது உருவங்களை உண்டியலில் செலுத்தல் வேண்டும். பின்னர் வேறொரு இடமும் செல்லாமல் வீடு திரும்பல் வேண்டும். பயனடைவதாக மக்களிடை தீவிர நம்பிக்கை உண்டு.

திருக்காளத்திக்கு விமானமூலம் செல்வதென்றால் திருப்பதி நிலையம் செல்லல் வேண்டும். புகையிரத மூலம் காளஹஸ்தி நிலையம் நேரடிச் சேவையுண்டு. சென்னையிலிருந்து பேருந்து காளஹஸ்தி பஸ்நிலையம் செல்லத் தாராளமாகச் சேவையுண்டு. தமிழில் உரையாடலாம். மலிவான சீட்டு 20 ரூபா, 30 ரூபாவுக்கும் உண்டு. தங்குமிடம், உணவு யாவும் பிரமாதமாகக் குறைந்த செலவில் கிடைக்கும்

**பஞ்சபூதங்கள்:**

பாரிடை ஐந்தாய் பரந்தாய், போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய், போற்றி
தீயிடை மூன்றாய் திகழ்ந்தாய், போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய், போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய், போற்றி
போற்றித் திருவகவல் - மாணிக்கவாசகர்

காஞ்சி (மண்), திருவானைக்கா (நீர்), திருவண்ணாமலை (நெருப்பு), திருக்காளத்தி (வாயு), சிதம்பரம் (ஆகாயம்), ஆகியவற்றிற்கு உரிய யாவும் சிவத்தலங்கள். திருக்காளத்தி தவிர ஏனையவை தமிழ் நாட்டிலே இருக்கின்றன. திருவானைக்கா, திருக்காளத்தி இரண்டு தலங்களையும் பிராணிகள் வழிபட்டு முத்தியடைந்தன.

சிதம்பரம் கலசம் 45 ஆவது இதழிலும், காஞ்சிபுரம் கலசம் 64 ஆவது இதழிலும் முன்னர் வெளிவந்தன. மிகுதி மூன்றும் தொடர்ந்து வந்து, திருக்காளத்தியோடு நிறைவுபெறுகிறது.

பூதங்கள் சீற்றம் கொண்டால் எம்மை அறியாமலே பயந்தான்!
மண் - பூகம்பம், பூமியதிர்ச்சி, மண்சரிவு
நீர் - வெள்ளம், சுனாமி
நெருப்பு - தீப்பிடித்தல்.
காற்று - புயல், சூறாவளி, மரங்கள் விழுதல், வீடு சேதம்
ஆகாயம் - இடி, மின்னல் தாக்கம்.

பூதங்களால் நன்மைகளும் உண்டு.
மண் - எமைத் தாங்குவது, உணவு உற்பத்தி செய்ய உதவுவது
நீர் - தாகம் தீர்க்க, உடல் சுத்தமாக்க, பயிர் வளர்க்க.
நெருப்பு - குளிர் காய்தல், சமைத்தல், தீபம், ஒளி.
காற்று - தீண்டினால் தென்றல், எமது மூச்சு.
ஆகாயம் - பகலில் சூரியன், இரவில் சந்திரன், நட்சத்திரங்கள்.

திருக்காளத்திப் பதிகங்கள்:
சந்தமாரகிலொடு - தி 3 ப 36 திருஞானசம்பந்தர்
வானவர்கள் - தி 3 ப 69 திருஞானசம்பந்தர்
விற்றூணொண் - தி 6 ப 8 திருநாவுக்கரசர்
செண்டாடும் - தி 7 ப 26 சுந்தரர்

சந்தமா ரகிலொடு சாதிதேக் கம்மரம்
உந்துமா முகலியின் கரையினில் உமையொடும்
மந்தமார் பொழில்வளர் மல்குவண் காளத்தி
எந்தையா ரிணையடி யென்மனத் துள்ளவே
- திருஞானசம்பந்தர்.

# பசி

தில்லையூரான்

பசி என்ற சொல் ப + சி என்ற இரண்டு எழுத்துக்களாலானது, போர் என்ற சொல்போல அதன் ஆற்றல் அளவிடற்கரியது. யானை முதல் எறும்பு ஈறாகவும் அரசன் முதல் ஆண்டி வரையும் அதன் ஆதிக்கத்தை உணராத உயிர்கள் இல்லையென்றே கூறலாம். பசியைப் பசிப்பிணி என்றும் கூறுவார்கள். அற நூல்களிலும் அருள் நூல்களிலும் பல சிந்தனையாளர்கள் அதுபற்றி எமக்கு அறிவுரை கூறியிருக்கிறார்கள். அவர்களின் சிந்தனைகளிற் சிலவற்றைத் தொகுத்துத் தருவதே இக் கட்டுரையின் நோக்கமாகும். ஔவையார் “நல்வழி ” என்ற உயர்ந்த கருத்துக்கள் அடங்கிய நூலில் :

மானங் குலங்கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவமுயர்ச்சி தாளாண்மை - தேனின்
கசிவந்த சொல்லிர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்

என்றும்

ஒருநாள் உணவை ஒழியென்றால் ஒழியாய்
இருநாளுக் கேலென்றால் ஏலாய் - ஒருநாளும்
என்னோ வறியாய் இடும்பைகூர் என்வயிறே
உன்னோடு வாழ்தல் அரிது.

என்றும்

சேவித்தும் சென்றிரந்தும் தெண்ணீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும் - போவிப்பம்
பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி அரிசிக்கே நாம்

என்றும்
பசியின் ஆற்றலைத் தெளிவுபடுத்தியுள்ளார். மனித குலத்தின் எல்லா நலங்களையும் கெடுக்கக்கூடிய பசிப்பிணி எவ்வளவு சக்தி வாய்ந்தது என்பது தேற்றம். மேலும் பிறப்பறுக்கவே பிறவியை இறைவன் தந்துள்ளான் என்பதை மறந்து மனித குலம் பசிக் கொடுமையைத் தீர்ப்பதற்கே படாதபாடு பட்டுக்கொண்டிருக்கின்றது என்பதை ஔவையார் அழகாக எடுத்துக் கூறியுள்ளார்.

மானுடப் படைப்பில் எல்லோரும் சமமாகப் படைக்கப்படுவதில்லை. உடல் ஊனம், மனோவியாதி, புத்தி சுவாதீனம் போன்ற வித்தியாசங்கள் இருப்பதை நாம் கண்கூடாகக் காணலாம். அந்நிலையில் தங்களுக்கு வேண்டிய உணவைத் தாமே தேடக்கூடிய ஆற்றல் அவர்களிடம் இருப்பதில்லை. அப்படியாயின் அவர்களைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பு அவர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு ஏற்படுகின்றது. இதனை உணர்ந்த அருளாளர், திருவள்ளுவ நாயனார், திருக்குறள் நூலில் ஈகை என்ற அதிகாரத்தில் மூன்று குறள்களில் இதுபற்றி இயம்பியுள்ளார்.

அவையாவன:

ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின் குறள் 225

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. குறள் 226

பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும்
தீப்பிணி தீண்டல் அரிது குறள் 227

தொடர்ந்து கொல்லாமை என்ற அதிகாரத்தில்

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை. குறள் 322

எனக் கூறியிருப்பதை நாம் காணலாம்.

இதனால், தானத்தில் சிறந்தது அன்னதானம் என்பது தெளிவாகிறது.
திருமூலநாயனார் அருளிய திருமந்திரத்தில்

யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே

என்று அறிவுரை கூறியிருக்கிறார்.

மலர் கிடைக்காவிட்டால் பச்சிலையாவது இறைவனுக்குச் சூட்டவேண்டும். கட்டிவைத்திருக்கும் பசுவுக்கு ஒரு வாய் நிறையத் தீனி கொடுக்கவேண்டும். தான் உண்ணும்போது ஒரு கவளம் சோறாயினும் இன்னுமொரு உயிரின் பசியைப் போக்கக் கொடுக்கவேண்டும். அது காக்கைக்கோ, அல்லது எறும்பு போன்ற சிற்றுயிருக்கோவாக இருக்கலாம்.

உலக வாழ்வை முற்றும் துறந்த பட்டினத்தடிகள்:

ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு உயர் செல்வமெலாம்
அன்றென்றிரு பசித்தோர் முகம்பார் நல்லறமும் நட்பும்
நன்றென்றிரு நடுநீங்காமல் நமக்கிட்டபடி
என்றென்றிரு மனமே உனக்கே உபதேசமிதே

என்று கூறிப் பசியின் கொடுமையை நினைவூட்டுகிறார். உயர்ந்த ஆன்மிகக் கருத்துக்களை உபதேசித்த அடிகளின் கருணையுள்ளம் பசியால் வாடும் மக்களை மறக்கவில்லை.

முருகப்பெருமானின் திருவருள் பெற்ற அருணகிரிநாத சுவாமிகள்: கந்தரலங்காரம் என்ற திருப் பாடலில்

வையிற் கதிர் வேலோனை வாழ்த்தி வறிஞர்க்கென்றும்
நொய்யிற் பிளவளவேனும் பகிர்மின்கள் உங்கட் கிஞ்ஞன்
வெய்யிற்கு ஒதுங்க உதவா உடம்பின் வெறு நிழல்போல்
கையில் பொருளும் உதவாது காணும் கடைவழிக்கே

என்று உபதேசம் செய்கிறார்.

“நொய்யிற் பிளவளவேனும்” என்ற சொற்றொடர் மூலம் “உங்கள் வசதிக்கேற்ப ஆகக் குறைந்த அளவாவது பகிர்ந்து கொடுங்கள்” என்று எம்மை இரந்து கேட்கிறார்.

இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றிய வடலூர் வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் பல அற்புதங்களைச் செய்து பிரசித்திபெற்ற அருளாளர். நீரில் தீபமேற்றியும், பரஞ்சோதியுடன் சோதி வடிவாயும் முத்தியடைந்த ஞானியாவார். சமரச சுத்தசன்மார்க்க சபையை நிறுவிப் பல புரட்சி கரமான சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தவர். பழைமை வாதிகளின் சீற்றத்துக்கு ஆளாகிப் பல இன்னல்களுக்கு ஆளானவர்கள். அவர் சென்னையில் சத்தியதர்மசாலை என்ற அறக்கட்டளையைத் தாபித்து அங்கு வரும் ஏழைகளுக்கு மூன்றுவேளை உணவளித்துப் பசிப்பிணி தீர்த்த மகான் ஆவர். அவர் தொடக்கிவைத்த ஸ்தாபனம் இன்றும் நடைபெற்றுக்கொண்டிருப்பது ஆச்சரியமான செய்தியாகும். தமிழ்நாடு அரசு செலவின் ஒருபகுதியைப் பொறுப்பேற்றுள்ளது.



## திரு வைத்திலிங்கம் செல்லத்துரை அவர்கள்

சைவ முன்னேற்றச் சங்கத்தில் உறுப்பினராகப் பல வருடங்கள் இருந்தவர் திரு செல்லத்துரை அவர்கள். அறங்காவலர், செயற்குழு உறுப்பினர் எனப் பல பதவிகள் வகித்துச் சங்கத்தின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியவர். நகைச்சுவை உணர்வுள்ளவர்; நல்ல இசைப் பிரியர். பஞ்சபுராணத்தை அழகாக ஓதுபவர். Highgate Hill முருகன் கோயிலில் அறங்காவல் சபையில் இருந்து பல சேவைகள் செய்தவர். தாய்நாட்டிலிருந்து சொற்பொழிவாளர்களை வருவித்துச் சமயச் சொற்பொழிவுகள் நிகழக் காரணமானவர். கலசம் சஞ்சிகையை விரும்பி வாசிப்பவர். அண்மையில் அவர் அமரரா கிவிட்டார். ஆறாத் துயரில் இருக்கும் அவரின் மனைவிக்கும் உறவினருக்கும் கலசம் குழு ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவிக்கின்றது.

## திரு ஐயாத்துரை சோமாஸ்கந்தமூர்த்தி



ஐ. தி. சம்பந்தன் என்று பலராலும் அறியப்பட்ட திரு சோமாஸ்கந்த மூர்த்தி அவர்கள் அண்மையில் அமரராகிவிட்டார். இவர் சைவ முன்னேற்றச் சங்கத்தில் பல வருடம் உறுப்பினராக இருந்தவர். செயற்குழு உறுப்பினராகவும் அறங்காவலராகவும் கடமை புரிந்தவர். வெளியீட்டுத் துறைச் செயலாளராக இருந்தபோது தனது அநுபவத்தை முழுமையாகப் பயன்படுத்தியவர். பின்னாளிலும் கலசம் வெளிவந்த அடுத்த நாளே தனது கருத்தைத் தெரியப்படுத்துவார். அதில் பாராட்டும், ஆலோசனைகளும் பொதிந்திருக்கும். ஆறாத் துயரிலில் இருக்கும் அவரின் குடும்பத்துக்குக் கலசம் குழு ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவிக்கின்றது.

**இந்த இரு பெரியவர்களின் ஆன்மா சாந்தி அடைய, எல்லாம் வல்ல அருள்மிகு சிவகாசுந்தரி உடனாய சித்மபரேசுவரரின் “மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்”**

# இந்துசமயமும் வாழ்வியலும்

அமிர்தா தியாகலிங்கம்

இந்துசமயம் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்று நான்கு வேதங்களைக் கொண்டது. இந்த வேதங்கள் சொன்ன வழியில் தான் இந்துசமயம் செல்கிறது. இத்துடன் 108 உபநிடதங்கள், இதிகாசங்கள், புராணங்கள், ஆகமங்கள், மந்திரங்கள், மதக்கோட்பாடுகள், தோத்திரங்கள் உள்ளன. இந்துசமயத்தில் ஆறு சமயங்களான சைவம், வைணவம். காணா பத்தியம். கௌமாரம், சாக்தம், சௌரம் உள்ளன.

எம்மதமும் சம்மதம் என்று சொல்லும் எம்மதத்தில் மதம் இல்லை. மதத் தலைவர்களும், ஆசாரியார்களும், குருமாரும், பெரியோர்களும் பேணிக்காத்த இந்துசமயம், மானுடரின் பிறப்பு முதல் இறப்புவரை வழிகாட்டுகிறது; வழிநிற்கிறது.

இந்துசமயமே சனாதனதர்மம் எனக் குறிப்பிடப்படுகிறது. சனாதனம் என்றால் நிலையானது, புராதனமானது, காலத்தால் அழியாதது என்று பொருள்படும். எம்மதத்தை தோற்றியவர் யார், எப்போ தோன்றியது என்று கால நிர்ணயம் இல்லாததால் இது ஆதியானது, அநாதியானது, அடியும் முடியும் காண முடியாதது. எமது சமயத்தில் கோட்பாடுகள் மட்டும் உண்டு. விதிகளோ, கட்டளைகளோ இல்லை. வேதங்கள், உப நிடதங்கள் போதிக்கின்றனவே ஒழிய வற்புறுத்தவில்லை. ஆலயங்களில் மூன்று காலமோ, ஆறு காலமோ பூசைகள் நடை பெறும். போய் வழிபடுவது அவரவர் விருப்பம். எப்போது போகவேண்டும், ஏன் போக வேண்டும், எப்படிப் போகவேண்டும் என்று விதிகள் உண்டு. அநுசரிப்பது அவரவர் கடமை.

காலையில் எழுந்ததும் முகம் கழுவி, திருநீறு அணிந்து, கடவுளை தொழுது, நாளைத் தொடங்கும் நாம், உண்ணும் உணவுக்கும், அதைத் தந்த இறைவனுக்கும் நன்றி கூறுகிறோம்; தொழுகிறோம். இரவு படுக்கைக்குப் போகு முன்னும் இறைவனுக்கு வணக்கம், நன்றி செலுத்துகிறோம்.

தாய்மை அடைந்த கருவுற்ற பெண்ணுக்கு பல சடங்குகள் இருக்கின்றன. 7ஆம் மாதத்தில் வளைகாப்பு நிகழ்ச்சி நடத்துவார்கள். இந்த நிகழ்ச்சி அறிவு பூர்வமானது. தாய்மையான பெண்ணுக்கு இரண்டு கைகளிலும் காப்புகள் அணிவிப்பார்கள். பெண் நடக்கும் போதும், கைகளை அசைக்கும் போதும் வளையல்கள் குலுங்கி சத்தம் ஏற்படும். இந்த 7ஆம் மாதத்தில் தான், கருவறையில் இருக்கும் குழந்தைக்குச் செவிப்புலன் வேலை செய்யத் தொடங்கும். இந்தச் சத்தத்தைக் குழந்தையும் கேட்கக் கூடியதாக இருக்கும். பெண்கள் மூக்குத்தி, தோடு, மெட்டி, கொலுசு அணிவதும், நெற்றியில் குங்குமம் இடுவதும், தாலி நெஞ்சில் படுவதும் அலங்காரமான விடயங்கள் அல்ல. ஒவ்வொன்றும் மருத்துவ ரீதியான காரணங்களைக் கொண்டவையாகும்.

குழந்தை பிறந்து சில வாரங்களில் புனிதப்படுத்துவதற்காக புண்ணியாவாசம் என்ற நிகழ்ச்சியை வேதம் தெரிந்த அந்தணர்களைக் கொண்டு நடாத்தி, நாமகரணம் செய்வார்கள். பிள்ளைகளுக்கு மொட்டை போடுதல் என்ற முடிஇறக்குதல், சோறூட்டுதல், காதுகுத்தல் போன்ற சடங்குகள் நடைபெறும். குழந்தைகள் ஏற்ற வயதை அடைந்ததும், ஏடு துவக்குதல் என்ற சடங்கை நவராத்திரி முடிவில் விஜயதசமி என்ற நன்னாளில் கோயிலில் செய்வார்கள். அதன் பின்புதான் பிள்ளை களைப் பாடசாலைக்கு அனுப்புவார்கள். அந்தணச் சிறுவர்களுக்கு உரிய வயதில் உபநயனம் செய்வார்கள்.

பெண் பிள்ளைகளாயின் பருவம் அடைந்ததும் ருது சாந்தி விழா நடைபெறும். திருமணவயதை எட்டியதும் ஆண், பெண் இருபாலாருக்கும்

திருமணம் செய்விப்பார்கள். அதில் பல சடங்குகள் இடம் பெறும்.

## மகான்களின் அற்புதங்கள்

**அகத்தியர்:**

இவர் குடுவையில் பிறந்தவர். முதல் சோதனைக்குழாய்க் குழந்தையா? சிவனின் திருமணத்திற்கு எல்லோரும் கயிலைமலைக்கு சென்றபோது வடபகுதி தாழ்ந்தும் தென்பகுதி உயர்ந்தும் காணப்பட, சிவனால் தென்னகம் அனுப்பப்பட்ட அகத்தியருக்கு சிவனின் திருமணக்கோலத்தை அகத்தியர் இருந்த இடத்தில் சிவனால் காட்டப்பட்டது. அதனால் முதன்முதலில் தொலைக்காட்சியை பார்த்தவர் அகத்தியரா?

**இடைக்காடர்:**

இவர் தன் தவ வலிமையால் பஞ்சம் வரப்போவதை உணர்ந்து தன் குடிசையைக்கட்டும் போது தானியங்களையும் களிமண்ணுடன் கலந்து கட்டினார். ஆடுகளுக்காக எருக்கு மரங்களை வளர்த்தார். ஆடுகள், பஞ்சம் தாண்டவம் ஆடும்போது எருக்கம் இலையை உண்ணும். உண்டால் ஏற்பட்ட தினைவைப் போக்க அவரின் குடிசைச் சுவரில் உடம்பை தேய்க்கும். அப்போது உதிரும் தானியங்களை ஆட்டுப்பாலில் காய்ச்சி உண்டார். இவர் எப்படி உயிரோடு இருக்கிறார் என்பதைப் பார்க்க நவக்கிரகங்களும் பூமிக்கு வந்து இடைக்காடரை பார்த்தன. இடைக்காடர் அவர்களுக்கு ஆட்டுப்பாலில் கஞ்சி காய்ச்சி கொடுத்தார். அவர்களும் உண்ட களைப்பில் உறங்கினர். நவக்கிரகங்கள் மோசமான இடத்தில் இருப்பதால் பஞ்சகாலமாக இருப்பதை உணர்ந்த இடைக்காடர், துயிலும் அவர்களை தூக்கி நல்ல இடங்களில் உறங்க இடம்மாற்றி வைத்தார். சிறிது நேரத்தில் மேகம் இருண்டு அடைமழை பொழிந்து எங்கும் வெள்ளம். பூமி சிலிர்த்தது. குளிர் காற்று வீசியது. துயில் நீங்கி எழுந்த நவக்கிரக நாயகர்கள் நடந்ததை அறிந்தனர். இடைக்காடரை பாராட்டிச் சென்றனர்.

இராவணனும் நவக்கிரகங்களை கூண்டிற்குள் அடைத்து வைத்திருந்தான். இப்படியே போகர், புலிப்பாணி, பதஞ்சலி என்றே சொல்லிக்கொண்டு போகலாம். சித்தர்கள் கோள்களைக் கட்டுப்படுத்தி அவர்களின் செயலையும் மாற்றும் வல்லமை கொண்டவர்கள் என அறியலாம்.

**ராகவேந்திரர்:**

*1819* இல் ஸ்கொட்லாந்தில் பிறந்த தோமஸ் முன்றோ தனது *28* வயதில் இந்தியா வந்து ராணுவ அதிகாரியாகவும் பின் சென்னை (மதராஸ்) ஆளுநராகவும் பதவி வகித்தார். அப்போது ராகவேந்திர சுவாமிகள் சமாதி இருக்கும் மாஞ்சோலைக் கிராமத்துக்கும், ஆலயத்துக்கும் வரி விதித்தார்கள். அவர்கள் வரியைச் செலுத்தாது எதிர்த்த போது, ஆளுநர் தோமஸ் முன்றோ நிலைமையை அறிய நேரே சென்றார். தன்னுடன் வந்தவர்களை நிறுத்தி விட்டு, தொப்பி, காலணிகளை களைந்து விட்டு சமாதியை நோக்கிச் சென்றார். சமாதிக்குள் இருந்து வெளிப்பட்ட சுவாமிகளும் முன்றோவும் சிறிது நேரம் உரையாடினார்கள். முன்றோவுக்கு தெரிந்த சுவாமிகள் மற்றவர்களுக்குத் தெரியவில்லை, உரையாடலும் மற்றவர் களுக்குக் கேட்கவில்லை. இறுதியில் மஞ்சள் பூசிய அட்சதையை முன்றோவின் கைகளில் அளித்தார். முன்றோ அட்சதையைக் கொண்டு வந்து அன்றைய உணவு தயாரிக்கப்படும் அன்னத்தில் போட்டுச் சமையல் செய்து அனைவருக்கும் பரிமாறுமாறு கட்டளை இட்டார்.

மாஞ்சோலை கிராமம் வரி செலுத்தத் தேவை இல்லை என்ற இந்த நிகழ்வு, சென்னை அரசாங்க வர்த்தமானியில் “மாஞ்சோலை அடோனி தாலுகா” என்று அத்தியாயம் பதினொன்று, பக்கம் *213*இல் பதியப் பட்டுள்ளது. இன்றும் ஜோர்ஜ் கோட்டை தமிழக அரசு அலுவலகத்தில் உள்ளது.
முன்றோவின் மற்றச் செயல்: தன் வயிற்று வலியைத் தீர்த்த திருப்பதி பெருமாளுக்கு காலைப் பிரசாதத்துக்குப் பாத்திரங்களும்,

நிலமும் கொடுத்து ஒரு கட்டளையை ஏற்படுத்தினார். இன்றும் காலையில் இவர் கொடுத்த பாத்திரங்களில் பிரசாதம் தயாரித்துப் பெருமாளுக்கு படைத்து, பின் பக்தர்களுக்கு கொடுக்கப்படுகிறது.

குமரகுருபரர்:

இளமையில் ஐந்து வயது வரை பேசவராத குருபரரைப் பெற்றோர் திருச்செந்தூர் கோயிலுக்குக் கூட்டிச்சென்று வழிபட்ட பின், பேச்சு வந்தது. இவர் அங்கேயே கந்தர் கலி வெண்பா பாடினார். மதுரை வந்து, மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ் பாடியபோது அம்மனே சிறுமியாக வந்தமர்ந்து கேட்டு, முத்து மாலையைப் பரிசளித்தார். இவர் திருவாரூர் சென்று "திருவாரூர் நான்மணிமாலை" பாடித் தியாகராசப் பெருமானை வணங்கினார். திருவாரூரில் இருந்து தர்மபுரம் வந்த குருபரர் திருக்கைலாய பரம்பரை சைவமடம், தர்மபுரம் ஆதீனத்தை அடைந்தார். ஆதீன தலைவர் மாசிலாமணி தேசிகர்தான், தன் குரு என உணர்ந்து தீர்மானித்து வணங்கினார். குருபர ரின் திறமையை மனதில் கண்டு கொண்ட தேசிகர் அவரிடம் பெரிய புராணத்தில் வரும் "ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள" என ஆரம்பிக்கும் செய்யுளின் சிறப்பு என்ன என வினவினார். இப்பாடல் நடராசப்பெருமான் சிதம்பரத்தில் ஆடும் நடனத்தைப் பார்த்து மெய்ம்மறந்து நின்ற சுந்தரமூர்த்தி நாயனார் நிலையைச் சொல்லும். சேக்கிழாரும் பெரியபுராணத்தில் இதை அழகாக விவரித்துக் கூறியுள்ளார். தேசிகரின் இக்கேள்விக்கு எதுவும் சொல்லத் தோன்றாது குருபரர் இருந்தார். குருவின் விருப்பத்தை ஏற்று, காசி சென்ற குருபரர் அங்கு ஒரு மடத்தைக் கட்டித் தன் கால இறுதிவரை பாதுகாத்தார். இன்றும் இம்மடம் போகும் பக்தர்களுக்கு சேவை புரிகிறது.

முகலாய மன்னர்கள் காசியில் இந்துமதத்தைச் சீரழிப்பதை நிறுத்த முடிவு செய்த குருபரர், அவர்களின் இந்துஸ்தானி மொழி தெரியா ததால் கல்விக்கடவுள் சரஸ்வதிதேவியை வணங்கி, "சகலகலாவல்லிமாலை" பாடி, இந்துஸ்தானியில் பேச அருள் பெற்றார். மன்னனின் அரண்மனைக்குச் சென்ற குமரகுருபரருக்கு, மன்னன் இருக்க இடம் கொடுக்காததால், இறைவனை நினைக்க, ஒரு சிங்கம் பிரசன்னமானது. சிங்கத்தின் மேல் அமர்ந்து மன்னனுடன் பேசி மடம் கட்ட நிலமும், பொருள்களும் பெற்றார். மன்னன் குமரகுருபரரின் பக்திக்கும் ஆற்றலுக்கும் மரியாதை புரிந்தான்.

கருவறையில் இருந்து கல்லறைவரை வழிகாட்டும் எமது சமயம், ஆண் பெண் பாகுபாடின்றி, சக்தியும் சிவனும் சரிபாதியாக இருந்தால்தான், முழுமை அடையும் எனச் சிந்தித்து அர்த்தநாரீஸ்வரர் வடிவில் உருவம் கொடுத்தார்கள். இறைவன் மானுடர்களுக்கு மட்டுமின்றி, சகல சீவராசிகளுக்கும் முதன்மை கொடுத்தார். ஊர்வனவும், மிருகங்களும், பறவைகளும் கூட, தன் வாகனங்களாக இருக்க அருள் புரிந்தார்.

அதர்மங்கள் தலை தூக்கும் போது இறைவனே பூமியில் ராமனாக, கண்ணணாக, நரசிம்மனாக பல அவதாரங்கள் எடுத்து, குடிகளையும், நம்பிய பக்தர்களையும் காத்துக் கொள்கிறான். ஆதிசங்கர் ஏழையின் வீட்டில் பொன் மழை பொழிய வைத்தார். தன் நண்பன் குலேசரின் வறுமையைப் போக்கிய கண்ணபிரான், மார்க்கண்டேயரின் ஆயுளை நீடித்த சிவன், நம்பியாண்டார் நம்பியின் கோரிக்கைக்கு அமுதுண்டு, பின் கல்வி புகட்டிய பொல்லாப் பிள்ளையார் என இப்படி இறைவனின் பிரசன்னங்கள் ஏராளம்.

காரைக்கால் அம்மையாருக்கு மாங்கனி அளித்த சிவன், ஆண்டாள் அணிந்த மாலையே வேண்டும் என்று சூடிய பெருமாள், ஏன் கல்யானையையே கரும்புண்ண வைத்த இறைவன், இப்படி இன்னும் எத்தனை எத்தனையோ.

கூற்றுவனை வென்ற சாவித்திரி, கணவனுடன் சேர்ந்து துன்பத்தை அனுபவித்த தமயந்தி, சூரியனைச் சில நாள்கள் உதிக்கவிடாது,

பகலையும் இரவாக்கிய நளாயினி, மும்மூர்த்தி களையும் பாலகர்களாக்கித் தன் கற்பைப் பறைசாற்றிய அனுசுயை, கணவனுக்காக மாங்கனி பெற்ற காரைக்கால் அம்மையார், ஸ்ரீரங்கம் கோயில் வெள்ளைக் கோபுர உச்சியில் படைத்தளபதியை தள்ளி உயிரிழக்கச் செய்த வெள்ளை அம்மாள். தேவாரங்களை வழங்கிய மூவருக்கு தோள் கொடுத்த உத்தமிகள், ஔவையார், ஆண்டாள், காரைக்கால் அம்மையார் போன்ற தெய்வப் பிறவிகள் என எத்தனையோ பெண்கள். இந்து சமயத்தில் பக்தியும், பாசமும் கொண்ட பெண்களுக்கா பஞ்சம்? பாண்டிய மன்னனின் வெப்பு நோயைத் தீர்க்கச் சென்ற சம்பந்தரைப் பார்த்து, பாண்டிமாதேவி மங்கையர்க்கரசியார் கலங்கினார். தான் சிறுவன் தனக்கு சமணர்களால் துன்பம் ஏற்படுமோ என நினைத்து மங்கையர்க்கரசியாரின் முகத்தில் கண்ட கவலையையும், உள்ளத்தில் கண்ட தாய்மைக்குரிய பரிவையும் உணர்ந்த சம்பந்தர் அவரை நம்பிக்கை கொள்ள வைக்க,

“மானின் நேர்விழி மாதராய் வழுதிக்கு
மாபெரும் தேவி கேள்
பால்நல் வாய்ஒரு பாலன் ஈங்கிவன்
என்று நீ பரிவெய்திடேல்
ஆனை மாமலை ஆதியாய
இடங்களிற் பல அல்லல் சேர்
ஈனர்கட்கு எளியேன் அலேன்
திரு ஆலவாய் அரன் நிற்கவே”

என்று பாடினார்.

அருணகிரிநாதர், அபிராமிபட்டர், சமய குரவர்கள், பெரியபுராணத்தில் வரும் நாயன்மார்கள் என ஆண்கள் பலரும் பக்திப்பெருக்கால் நிறைந்திருந்தனர்.

சமயகுரவர்கள் வாழ்க்கையில், நாம் பல நிகழ்ச்சிகளைக் காணலாம். இறந்தவர்களை இறை அருளால் உயிர்ப்பித்தார்கள். ஊமை களைப் பேச வைத்தார்கள். இறைவனே பிட்டுக்கு மண் சுமந்தான். திருமணத்தை நிறுத்திய இறைவனையே காதலுக்கும் தூது போக வைத்தார்கள். ஆண்டவன் ஆடுவதுடன் நில்லாது நாடகமும் ஆடினான். நரியைப் பரியாக்கினான்.

நாயன்மார்கள் வாழ்வில் பல நாடகங்கள். பிள்ளையார் மகாபாரதத்தையும், சிவனார் திருவாசகத்தையும் எழுதி கொடுத்தார்கள்.

இந்துமதம் கடவுளும் மனிதனாக பிறந்தால் நியதிகளுக்கு அப்பாற்பட்டவன் அல்ல என்பதை காட்டுகிறது. இராவணனை கொன்ற இராமனையும் பிரமகத்திதோஷம் பிடித்தது. இராமன் இராமேஸ்வரத்தில் பிரம்மகத்தி தோஷமும் வேதாரண்யத்தில் வீரகத்தி தோஷமும் நீங்க, சிவனை வழிபட்டுத் தோஷத்தைப் போக்கினார்.

திருவானைக்கா கோயிலில் சமயல்கட்டில், வேலை செய்த களைப்பில் உறங்கிய படிப்பறிவில்லாத வரதனின் வாயில் சரஸ்வதி தேவி தாம்பூலத்தை உமிழ்ந்ததால் வரதன் உடனே கவிபாடும் திறன் பெற்று பின்பு காளமேகப்புலவர் என அறியப்பட்டார்.

காளமேகபுலவர் போல், நாம் வாழும் காலத்தில் சிறு கூடல்பட்டி மலையரசி அம்மனின் அருள் பெற்ற முத்தையா, பிறகு கவிஞர் கண்ணதாசன் என்று மங்காப்புகழ் பெற்று, சாகா வரமுடன் “நான் நிரந்தரமானவன் அழிவதில்லை, எந்த நிலையிலும் எனக்கு மரணம் இல்லை” என்று மார்தட்டியவன்.

அன்றே சொன்னான், அறிந்தே சொன்னான் இந்து. கருவிகள் ஏதும் இல்லாமல், செவ்வாய் கிரகம் சிவப்பு நிறம் என்றும், வியாழன் பெரிதானதென்றும், வெள்ளி அதிக பிரகாசமானதென்றும், சனி பூமியில் இருந்து அதிக தூரத்திலும் இருந்து, மெதுவாக சுற்றும் கிரகம் என்றும் அன்று சொன்னதை, இன்று மேலைநாட்டு விஞ்ஞானிகள் ஓம், ஆம் போட்டு சரி என்கிறார்கள்.

சூரியனின் வெப்பத்திலும், வெளிச்சத்திலும் சிவனையும், சந்திரனின் குளிர்ச்சியில் சக்தி யையும், ஆகாயம், சமுத்திரம் ஆகியவற்றில்

கருநீலவண்ணன் கண்ணணையும், வீசும் காற்றில், குடிக்கும் நீரில், வசிக்கும் பூமியில், ஆகாயத்தில், நெருப்பில் என இயற்கையில் இறைவனைக் காட்டும் இந்துமதம், இதனை வாழ்வியலாக்குகிறது.

ஈடுபாட்டுடன் செயல், நிபந்தனை அற்ற அன்பு, நான் என்னும் அகந்தையை விடல், தொடர் தியானம், எவ்வுயிரும் தன்னுயிராய் கொள்ளல், இயல்பாக வாழ்தல் இவையே பூரண வாழ்வையும் தந்ததோடு இந்துமதம் நமது அடையாளமாகவும் விளங்குகிறது.

முகத்தில் சிரிப்பையும், இதயத்தில் அன்பையும், நாக்கில் உண்மையையும், கண்களில் இரக்கத்தையும், கைகளில் தர்மத்தையும், குரலில் இறை வணக்கத்தையும் காட்டும் மானுடர்களை இறைவன் கைவிட்டதில்லை; காத்தருளுகிறான்.

யார் கோடீஸ்வரர்கள்? மானுடர்கள் குடிசையில் வாழ்ந்தாலும் கடன், பகை, நோய் இல்லாது வாழ்ந்தால் அவர்கள் கோடீஸ்வரர்கள்!

பகவத்கீதை, நாராயணியம், கருடபுராணம், பட்டினத்தார் பாடல்கள் போன்ற நூல்கள் இறைவழி நின்று மானுடர்கள் நல்வழியில் வாழ வழிகாட்டுவதுடன் நின்றுவிடாது வரும் துன்பங்களையும் போக்குகிறது.

இறைவன் அழைத்தால் ஒழிய அவனை தரிசிக்க அனுமதி இல்லை.

முருகன் அடியவரான பாம்பன் சுவாமிகளுக்கும், பழனி முருகனை தரிசிக்க அனுமதி கிடைக்கவில்லை. அகத்தியருக்கும் கும்பகோணம் தேப்பெருமா நல்லூர் கோயிலுக்குச் செல்ல அனுமதி கிடைக்கவில்லை.

“அரிது அரிது மானுடராய்ப் பிறப்பது அரிது.” “புல்லாகி, பூடாகி, புழுவாய், மரமாகி எல்லாப்பிறப்பும் பிறந்து இளைக்காமல்” இறைவனை வணங்கி நற்கதியடைவோமாக.

..................

# திருமந்திரம்

கண்காணி இல்லென்று கள்ளம் பலசெய்வார்
கண்காணி இல்லா இடமில்லை காணுங்கால்
கண்காணி யாகக் கலந்தெங்கும் நின்றானைக்
கண்காணி கண்டார் களவொழிந் தாரே.

- திருமந்திரம்

அறிவு இல்லாதவர்கள் பலர், தம்மைக் கண்காணிப்பவர்கள் இல்லை என்ற தைரியத்தில் தவறுகள் பல செய்கிறார்கள். அது மனித இயல்பு. உண்மையில் நம்மைக் கண்காணிக்கும் இறைவன் இல்லாத இடமே இல்லை. அதை உணர்ந்தவர்கள் தவறை ஒருபோதும் செய்வதில்லை. ஆழ்ந்த விழிப்புணர்வுடன் பார்த்தால் கண்காணிப்பவர் எங்கும் இருப்பதை உணர முடியும். அவ்வாறு உணர்ந்த பின் தங்களிடம் இருக்கும் தவறுகளை மனிதர்கள் விட்டு விடுவார்கள்.

# Satash Community Care






உடற்குறைபாடு அல்லது மனநலக் குறைவு காரணமாக உங்களுக்கோ அல்லது உறவினருக்கோ உதவி தேவைப்படின் பல ஆண்டுகள் அநுபவமும் அங்கீகாரமும் பெற்ற எங்கள் சேவையை நாடுங்கள். அவரவர் தேவைகளுக்கேற்பப் பராமரிப்பைத் திட்டமிட்டு வகுத்துச் செயற்படுத்துவதில் எமது நிறுவனம் பாராட்டும் பரிசும் பெற்றது.

மேலதிக விவரம் அறிய எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**Orchid Bungalow**
51 Mollands Lane,
South Ockendon RM15 6DH
**Adult Services 01708 850555**

**Jasmine Bungalow**
53 Mollands Lane,
South Ockendon RM15 6DH
**Children Services 01708 851189**

109-111 Molands Lane,
South Ockenden RM15 6DJ
**Adult Services 01708 856592**

**Trinity Community Centre**
East Avenue, London E12 6SG
**Domicilary Care 0203 200 1047**

www.satashcommunitycare.com

Letchmi Loganathan
07957 869620
letchmi@satashcommunitycare.com

Logan Loganathan
07956 377298
logan@satashcommunitycare.com

Sathian Loganathan
07949 755104
sathian@satashcommunitycare.com



சிவயோகம்
SIVAYOGAM

# இந்துக் கலாசார மையம்



128, Aurelia Road, Croydon CRO 3BF
Tel: 020 8767 9881, Fax: 020 8711 5333
Email: sivashakthy@sivayogam.co.uk



**குறைடனில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில் மூலஸ்தானம்**

அம்பாள் அடியார்கள் அனைவருக்கும் வணக்கம். உங்கள் அனைவருக்கும் அம்பாளின் அருள் கிடைக்க எல்லாம் வல்ல அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மனை ப் பிரார்த்திக்கின்றோ ம். அம்பாளின் அருளாலும், அடியவர்களின் நன்கொடைகளாலும் அம்பாளுக்குத் திருக்கோயில் அமைக்கும் திருப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மேலும் திருப்பணியை விரைவாக நிறைவேற்றுவதற்கு தங்களுடைய ஒத்துழைப்பை நல்குமாறு மிகவும் தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றோம். தங்கள் நன்கொடையை ஆலயத்தில் நேரடியாக பணமாகவோ அல்லது காசோலையாகவோ அல்லது வங்கியூடாகவோ வழங்கலாம். வங்கிக் கணக்கு விபரம்

Name :- SIVAYOGAM BUILDING FUND

Account No. :- 20057541

Sort Code :- 20 21 78

Bank :- BARCLAYS BANK

நன்றி

அறங்காவலர் சபையினர்



"Ammanai Saran Adainthal Athika Varam Peralam"

**SHRI KANAGA THURKKAI AMMAM (HINDU) TEMPLE TRUST**

Founded on 10 - 08 - 1991 Charity No: 1014409

5 CHAPEL ROAD LONDON W13 9AE | TEL: TEL: 020 8810 0835/020 8840 0485

www.ammanealing.org | Email: info@ammanealing.org

## புத்தாண்டில் உதயமாகிறது

# தியான மண்டபம்



அம்பிகையின் திருவருளினால்
நீண்டகால முயற்சியின் பயனாய்
கைகூடிய இத் தெய்வீகத் திருப்பணியில்
**உங்களின் கரங்களையும்**
இணைய வேண்டி நிற்கின்றோம்.
இத் தியான மண்டபத்தில்

**Elder's Day Centre**

ஆரம்பிக்கப்பட்டு
தியானப் பயிற்சியுடன் கூடிய
அனைத்து உதவிகளும்
நிபுணத்துவம் மிக்கவர்களால்
அளிக்கப்படும்.
இப் புனிதப் பணியில்
கைகோர்க்கும் அடியவர்களில்

**£1000 பவுண்களிற்கு மேல்**

அன்பளிப்புச் செய்பவர்களின் பெயர்கள் மண்டப சுவர்களில் பொறிக்கப்படும்

**Please DONATE to our MILESTONE PROJECT**

# "MEDITATION HALL"

# (ELDER'S DAY CENTRE)

**Bank Details: SKTA Temple Trust**

**LLOYDS BANK | SOFT CODE: 30-98-91 | ACCOUNT NO: 02717646**

அன்னையின் பணியில் இணைந்திடுங்கள் அவள் அருளைப் பெற்றிடுங்கள்

**Please donate as much as you can!**


J
SURYA JEWELLS
"உண்மை வெல்லும்"
நியாயமான வட்டி வீதத்தில்
தங்க நகைகள் அடகு பிடிக்கப்படும்
விதவிதமாய் வித்தியாசமான டிசைன்கள்
உங்கள் அழகிற்கு அழகூட்டிடும்
பழைய பவுண்களைக் கொடுத்து
புதிய நகைகளை வாங்கலாம்
அதுமட்டுமல்ல
நீங்கள் செய்யும் ஆடர்கள்
குறித்த நேரத்தில்
செய்து தருவதில் வல்லுநர்கள்
அதி குறைந்த வட்டி வீதத்தில்
வாரத்தில் 7 நாட்களும்
அடகு பிடிக்கப்படும். (2.5%)
மலிவான விலையில்
தரமான தங்கத்திற்கு
Eastham ல்
சூரியா ஜுவல்ஸ்
உங்கள் நகைகளை வேறு இடத்தில் கூடிய வட்டி வீதத்தில் அடகு வைத்திருந்தால்
எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.
Tel: 020 8552 2224
292 High Street North, London E12 6SA

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத
# ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி
# விசேட நாள்கள்

## ஜுலை *(11-07-2022)* தொடக்கம் ஒக்டோபர் *(04-10-2022)* வரை

| | | |
|---|---|---|
| *11.07.2022* | திங்கள் | பிரதோஷம் |
| *16.07.2022* | சனி | ஆடிப்பிறப்பு |
| *25.07.2022* | திங்கள் | பிரதோஷம் |
| *28.07.2022* | வியாழன் | ஆடி அமாவாசை |
| *31.07.2022* | ஞாயிறு | ஆடிப்பூரம் |
| *05.08.2022* | வெள்ளி | சுந்தரர் குருபூசை |
| *09.08.2022* | செவ்வாய் | பிரதோஷம் |
| *24.08.2022* | புதன் | பிரதோஷம் |
| *30.08.2022* | செவ்வாய் | விநாயக சதுர்த்தி |
| *07.09.2022* | புதன் | பிரதோஷம் |
| *09.09.2022* | வெள்ளி | நடேசர் அபிஷேகம் |
| *23.09.2022* | வெள்ளி | பிரதோஷம் |
| *26.09.2022* | திங்கள் | நவராத்திரி விரதாரம்பம் |
| *03.10.2022* | திங்கள் | சரஸ்வதி பூசை |
| *04.10.2022* | செவ்வாய் | விஜயதசமி |

பிரதோஷ காலத்தில் ஆலயத்தில் விசேஷ பூசை, வழிபாடுகள் நடைபெறுகின்றன.

கோயில் திறந்திருக்கும் நேரம்:

காலை: *8.30* மணிமுதல் *13.00* மணிவரை
மாலை: *5.00* மணிமுதல் *9.00* மணிவரை

ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேசுவரப் பெருமானை வழிபட்டுத் திருவருள் பெற்று உய்யுமாறு அடியார்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# பாஞ்சாலி சபதம்

- அநுஜா -

சென்ற இதழ் தொடர்ச்சி .......

பாண்டவரின் சிறிய தந்தையாகிய விதுரன் தான் வந்த காரணத்தையும், துரியோதனனின் தவறான உள் நோக்கத்தையும் தெளிவாகக் கூறினான். அறநெறி தவறாமல் வாழும் தருமர், அவனைச் சூதாட அழைக்க இருக்கும் திட்டத்தைக் கேட்டு மனம் குழம்பித் தளர்ந்து, “இதைத் தவிர்க்க ஏதாவது வழிசொல்லுங்கள்” என்று விதுரனைக் கேட்கிறார். அதற்கு அவர், “துரியோதனனுக்கு நானும் அண்ணனும் எவ்வளவோ சொல்லிவிட்டோம். அவன் கேட்பதாக இல்லை. உங்களுக்கு நன்மை தரக்கூடிய வழி எது என சிந்தித்துச் செயல்படுக” என்று தருமருக்குக் கூறி விடை பெறுகிறார்.

அறநெறி எதுவென நன்கு அறிந்த தருமர் ஒரு முடிவுக்கு வந்து தன் தம்பியரை அழைத்து உறுதியான குரலில் கூறுகிறார். “அறிவில்லா தோர் எத்தனை சூழ்ச்சிகள் செய்தாலும், எம்மை விருந்துக்கு அழைத்துவிட்டு, விருந்தினரைப் பேண வேண்டிய நெறி முறையில் பிழைத்தாலும், எங்களுக்கு என்று ஒரு கடமை உள்ளது. அதனைச் சரிவரச் செய்தலே முறையாகும். தந்தை எங்களை விருந்துக்கு அழைத்துள்ளார். சிறிய தந்தை இங்கு தூது வந்து அதைச் சொல்லிவிட்டுச் செல்கிறார். முன்பு இராமர் தந்தையின் சொல்லைத் தட்டாமல் நடந்து கொண்டதை நாம் மறக்கலாமோ? பெற்றோர் பெரியோரின் சொல்லை மீறி நடத்தலாகாது. நடப்பது எதுவாயினும் நன்மைக்கே என உணர்ந்து கொண்டேன். இனி யோசிப்பதற்கு எதுவுமில்லை. இன்னும் இரண்டு நாள்களில் எமது பரிவாரங்களுடன் அத்தினாபுரி செல்வதற்கு ஆயத்தம் செய்யுங்கள்” என்றார்.

பாரதியார் அதர்மத்தைக் கண்டு கொதித்தெழுவார். சிறுமையைக் கண்டு எள்ளி நகையாடுவார். இதனை அவர் பாடல்களில் பரவலாகக் காணலாம். இங்கு அவர் தனது பாணியில் பாடல்களை எழுதியுள்ளார். அண்ணன் தருமர் அத்தினாபுரம் புறப்பட வேண்டும் என்றதும் வீமனும் அருச்சுனனும் கொதித்தெழுகின்றனர். வீமன் அருச்சுனனைப் பார்த்துப் பின்வருமாறு கூறுகிறார்.

“மாமனும் மருமகனுமா - நமை
அழித்திடக் கருதி இவ்வழி தொடர்ந்தார்
தாமதஞ் செய்வோமோ? - செலத்
தகுந்தகு மென இடியுற நகைத்தான்
கோமகன் உரைப்படியே - படை
கொண்டு செல்வோமொரு தடையிலை
காண்.”

அண்ணன் சொன்னபடியே படைகளுடன் அத்தினாபுரம் செல்வோம். இது நாள்பட்ட (பலகாலமாக இருந்துவரும்) பகை. இப்போது தக்க தருணம் வந்துள்ளது. தம்பி உன் வில்லுக்கு கொலைப்பசி வந்துள்ளது.

போரிடச் செல்வமடா - மகன்
புலமையும் தந்தையின் புலமை களும்
யாரிடம் அவிழ்க்கின்றார் - இதை
எத்தனை நாள்வரை பொறுத்திடுவோம்.

“தகப்பனும், மகனும் யாருக்குக் கதை விடுகிறார்கள்? தகப்பனின் அறிவுத்திறனும், மகனின் சிறுமைத்தனமும் எங்களுக்குத் தெரியாதென்றா நினைக்கிறார்கள்? அவர்களும் நாமும் சேர்ந்து வாழ்வது நடக்கக்கூடிய காரியமா? அதற்கு வாய்ப்பே இல்லை” என்று வீமன் சொல்கிறான். வீமனைப் போலவே அருச்சுனனும் கோபத்தால் நெஞ்சு குமுற நிற்கிறான். மற்ற இரு தம்பியரும் (நகுலன், சகாதேவன்) பணிவுடன் தமையனாரின் முடிவை மறுத்துப் பேசுகிறார்கள்.

அன்பும் பண்பும் உருவான தம்பியர் இதுநாள்வரை அணுவளவும் தன் சொல்லை

மீறாதவர் இப்படிச் சொல்கிறார்களே என்று கோபப்படாமல் தருமர் புன்னகையுடன், “தம்பியரே! துரியோதனன் முன்பு செய்தவையும், இப்போது செய்ய இருக்கும் கொடுமையும், இதன் பின்பு நடக்க இருப்பனவும் நான் அறிந்துள்ளேன். என்னைப் பைத்தியக்காரன் என எண்ணிக்கொண்டு இப்படி உரைக்கின்றீர். உலகில் உயிர்களின் வாழ்க்கை ஒரு மாயவித்தை போன்றது. காலச்சக்கரம் ஒரே மாதிரியாகவே சுற்றும். அதில் ஏற்றத்தாழ்வு எதுவுமில்லை. யாவும் விதிப்படியே நடக்கும். தோன்றி மறைவதுதான் வாழ்க்கை. இதற்கு நாங்கள் விதிவிலக்கா? வாழ்வில் இன்பம், துன்பம், வெறுமை இவை மாறி மாறி வருவது இயற்கை. எது வந்த போதிலும் சான்றோர் தம் கொள்கையினின்றும் விலகமாட்டார்கள். எல்லாம் விதிப்படி என்று ஏற்றுக் கொண்டு தம் கடமையைச் செவ்வனே செய்து வாழ்வர். இருந்த போதிலும் அரசகுலத்தவரின் கடமை மற்றவர்களை விடத் தனித்தன்மையானது. அவர் தம் முன்னோர் எப்படி வாழ்ந்தார்களோ அவர்களைப் பின்பற்றி வாழ்வதே முறையாகும். தந்தையின் கட்டளையை மைந்தர் நிறைவேற்றுவதே கடனாகும். அதனை எடுத்துக் காட்டவே இராமரின் கதையைக் கூறினேன். இந்தப் புவியில் அரசாளும் அரசர்களில் தலைசிறந்த நீவிர் இன்று அந்த நெறியிலிருந்து தவறுவீர்களா?” என்று தருமர் பல்வேறு நீதி நெறிமுறைகளை எடுத்துரைக்க, செவிமடுத்த தம்பியர், “மலையில் ஏற்றிய தீபம் போல உலகுக்கு அறநெறி காட்டத் தோன்றிய அண்ணலே! பாண்டவரின் உயிருக்கு உயிரானவரே! உம்மீது கொண்ட அன்பின் மிகுதியினால், எமக்கு துன்பம் வரப்போகிறதே என்று நினைத்து உங்கள் கட்டளையை மறுத்துரைத்தோம். எங்கள் தவறான வார்த்தை களைப் பொறுத்தருள வேண்டும். எல்லா மறிந்தவரே உம் சொற்படியே நடப்போம்” என வணங்கிச் சென்றனர்.

பின்பு மூன்றாம், நாள் எவருக்கும் தீமை நினைக்காத தருமர் தம்பியருடனும் மனைவி பாஞ்சாலியுடனும் தம் தலைசிறந்த நகரைவிட்டுத் தீயோரின் நகர் நோக்கிப் பலவித படையினர், பரிவாரங்கள் சூழ, இசை வாத்தியங்கள் ஒலிக்க, பயணமாயினர். கொடிய விதியின் பிடியிலிருந்து எவரும் தப்ப இயலாது. விதி வர மதி கெடும் என்பதைப் பின்வரும் பாடலால் எடுத்துக் காட்டுகிறார் பாரதியார்.

நரிவகுத்த வலையினிலே தெரிந்து சிங்கம்
நழுவிவிழும், சிற்றெறும்பால் யானைசாகும்
வரிவகுத்த உடற்புலியைப் புழுவுங் கொல்லும்
வருங்கால முணர்வோரும் மயங்கி நிற்பார்
கிரிவகுத்த ஓடையிலே மிதந்து செல்லும்
கீழ் மேலாம் மேல் கீழாம் கிழக்கு மேற்காம்
புரிவகுத்த முந்நூலார் புலையர் தம்மைப்
போற்றிடுவார், விதி வகுத்த போழ்தினன்றே

இவ்வாறு விதி வரும்போது வழக்கத்திற்கு மாறாக எல்லாம் தலைகீழாக நடக்கும் என்பதை அழகிய உவமைகள் மூலம் தெளிவுபடுத்து கிறார் மகாகவி.

மாலைவேளையானதும் பாண்டவரும் அவரது சேனையும் வழியில் அழகிய ஒரு பூஞ்சோலையில் தங்கினர். அப்போது சூரியன் மறைய ஆரம்பித்தான். அந்த அழகிய காட்சியை இரசிக்க விரும்பிய அருச்சுனன் பாஞ்சாலியை அழைத்துச்சென்று பசும் புல் மேட்டில் மேற்கில் மறைய இருக்கும் சூரியனை வணங்கி அமர்கிறான். பாஞ்சாலி அவன் மடியில் சாய்கிறாள். சூரிய அஸ்தமனத்தைப் பாரதியார் தன் அதீத கற்பனைத்திறனால், அருச்சுனன் பாஞ்சாலிக்குச் சொல்வதாக அற்புதமாக வர்ணிக்கிறார்.

பாரடியோ வானத்திற் புதுமையெலாம்
பண்மொழீ, கணந்தொறும் மாறிமாறி
ஓரடி மற்றோரடியோடு ஒத்தலின்றி
உவகையுற நவநவமாத் தோன்றும் காட்சி
யாரடி இங்கிவைபோல இப்புவியின் மீதே
எண்ணரிய பொருள்கொடுத்தும் இயற்ற
வல்லார்!

இயற்கையின் எண்ணற்கரிய அழகாய் இறைவனின் படைப்பை உணர்ந்து வியப்பதாக மாலை வருணனைப் பாடல்கள் அமைகின்றன. சூரியன் மறையும் போது, ஒளி மிகுந்த

பொன்னிறமான வட்டத்தகடாகக் கண்ணுக்குத் தெரிவது வழக்கம். அதனைப் பாரதியார்,

இடிவானத் தொளிமின்னல் பத்துக்கோடி
எடுத்தவற்றை ஒன்றுபட உருக்கி வார்த்து
முடிவான வட்டத்தைக் காளி அங்கே
மொய் குழலாய் சுற்றுவதன் மொய்ம்பு
காணாய்!

இவ்வாறு அருச்சுனன் பாஞ்சாலிக்கு மாலைக் காட்சியின் மாண்பை எடுத்துரைத்து மகிழ்கிறான். இறுதியாகச் சூரியனைப் பின்வருமாறு வணங்குகிறான்.
“செங்கதிர்த் தேவன் சிறந்த ஒளியினைத்
தேர்கின்றோம் - அவன்
எங்கள் அறிவினைத்தூண்டி நடத்துக”.

பின்பு தங்கள் பரிவாரங்கள் தங்கிய இடத்துக்குப் பாஞ்சாலியுடன் செல்கிறான். எல்லோரும் அங்கு இரவுப் பொழுதைக் கழித்தபின்பு அதிகாலையில் மீண்டும் பயணத்தைத் தொடர்கின்றனர்.

வழிதோறும் இயற்கைக் காட்சியினை இன்புற்று இரசித்து மகிழ்ந்தபடி பாண்டவர் கடல் போன்ற சேனையுடன் சூரிய ஒளி மங்கு முன்பே இருளில் (அஞ்ஞான இருளில்) மூழ்கியிருக்கும் அத்தினாபுரியெனும் நகரைச் சேர்ந்தடைந்தனர். இவ்வாறு மனச்சந்தோஷமாகச் செல்லும் பாண்டவர் எதிர்கொள்ள இருக்கும் துன்பத்தை மறைமுகமாகச் சுட்டிக்காட்டுகிறார் பாரதியார்.

பாண்டவர் அத்தினாபுரத்திற்கு வருகிறார்கள் என்ற செய்தியைக் கேட்ட அந்நகர மக்கள் மகிழ்ச்சியால் மனம் பொங்க அவர்களைக் காண்பதற்காக அங்கு வந்து குழுமினர். வீதிகள் சாலைகள் சோலை எங்கும் மக்கள் நிறைந்தனர். எள்ளுப்போட்டால் கீழே விழ இடமின்றி மக்கள் நெருக்கமாகக் கூடினர். அந்தணர் மந்திரமோதினர். மங்கள வாத்தியங்கள் முழங்கின. பலவிதமான இசைக்கருவிகள் ஒலித்தன. யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படையாவும் அணிவகுத்து நின்றன. இவற்றின் ஒலி வானை முட்டியது. மன்னன் உதிட்டிரனும் தம்பியாரும் பாஞ்சாலியும் சேனையுடன், நகருக்குள் பவனி வரும்போது அவர்களை வரவேற்பதற்குப் பூரண கும்பம் வைக்கப்பட்டுத் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு மாதர்கள் விளக்கேந்திடப் பூமழை பொழிந்திடவும் அந்நகரத்தில் அழகு மேலும் பொலிவுற்றுக் காணப்பட்டது. இது மக்களுக்குப் பாண்டவரிடம் இருந்த பேரன்பையும் மதிப்பையும் காட்டுகிறது.

பாண்டவர் அரண்மனைக்குள் நுழைந்ததும் முதற்கண் கண்ணற்ற பெரிய தந்தையாகிய திருதராட்டினரை வணங்கி ஆசிபெற்றபின், தம் மதிப்புக்கும் அன்புக்குமுரிய வீட்டுமணர் (பீஷ்மர்) பாதத்தை வணங்கினர். அடுத்து அங்கிருந்த தம் குருவாகிய கிருபாசாரியார், துரோணர், அவரின் மகன், பெரியோர் எல்லோரையும் உள்ளன்போடு வணங்கி ஆசி பெற்றனர். பின்பு துரியோதனன், தம்பியர், கர்ணன், சகுனி என்போரைத் தழுவி மகிழ்ந்தனர். மகாராணி காந்தாரி, குந்திதேவி, பாஞ்சாலி, அங்குள்ள பெண்கள் யாவரும் அன்புடன் கதைத்து மகிழ்ந்தனர். இரவானதும் பாண்டவர் பாஞ்சாலியுடன் மாலைக்கடன்கள் முடித்தபின் உணவருந்திய பின்னர் பெண்கள் வீணையிசையுடன் பாட்டிசைப்ப, அதைக்கேட்டு இரசித்தபடியே துயில் புரிந்தனர். வர இருக்கும் துன்பத்தைப்பற்றிக் கவலைப்படாது மகிழ்வாக இருந்தார்கள் என்பதைப் பாரதியார்
“சிதைவின்மை ஆரியர் சிறப்பன்றோ” எனக் கூறுகின்றார்

## பாவிகள் யார்?

**பாவம் செய்பவர்களை நன்கு மதிப்பவர்கள் இல்லையாயின், பாவம் செய்பவர்களும் இலர். ஆதலால் பாவம் செய்பவர்களிலும், அவர்களை நன்கு மதிப்பவர்களே பெரும் பாவிகள்.**

**- நாவலர்**



# திருக்குறள் கதைகள்

திருமதி சாவித்திரி ஆனந்தன்

## பெரியாரைத் துணைக்கோடல்

Seeking Guidance of the worthy'

**அதிகாரம்** :45 **குறள்**: 445

சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்

பொருள் :
தக்க வழிகளை ஆராய்ந்து கூறும் அறிஞரையே உலகம் கண்ணாகக் கொண்டு நடத்தலால், மன்னவனும் அத்தகையாரை ஆராய்ந்து நட்புக் கொள்ள வேண்டும்.

Meaning: As a King must use his ministers as eyes (in managing his kingdom), let him well examine their character and qualifications before he engages them.

"குருஷேத்திரப்போர்" எனப்படும் மகாபாரதப் போர் 5000 வருடங்களுக்கு முன்னர் நிகழ்ந்தது. பாண்டவர்களுக்குச் சார்பாகச் சிலரும், கௌரவர்களுக்குச் சார்பாகச் சிலரும் என, அனைத்து மன்னர்களும் இந்தப் போரில் பங்கு பற்றினார்கள். உடுப்பியின் மன்னன் எந்தப் பக்கமும் சாராமல், நடுநிலையாகச் செயற்பட்டார். அவர், பகவான் கிருஷ்ணரிடம்,

"இந்தப் போரில் பங்கு பெறும் அனைத்து வீரர்களுக்கும் உணவு தேவை. அந்த உணவைத் தயாரித்து எல்லோருக்கும் வழங்கும் பொறுப்பை நான் ஏற்றுக் கொள்கிறேன்" என்று கூறினார். 18 நாள்கள் நீடித்த இந்தப் போரில் தினமும் ஆயிரக்கணக்கில் வீரர்களின் இறப்பு நிகழ்ந்து கொண்டிருந்தது. உணவு சிறிதளவும் வீணாகி விடலாகாது என்பது கருதி, தினமும் போரிடும் வீரர்களின் சரியான எண்ணிக்கைப்படியே உணவைத் தயாரிக்க வேண்டிய தேவை இருந்தது. எனினும், தினமும் இறக்கக்கூடிய வீரர்களின் எண்ணிக்கையை யாருமே அறிந்து கொள்ள முடியாத சூழ்நிலையிலும், ஒரு நாளேனும் ஒரு துளி உணவு கூட வீணாகாதபடி நாளாந்தம் உணவு தயாரிக்கப்பட்டது மிகவும் ஆச்சரியமான ஒன்று. இது எப்படிச் சாத்தியமாகும் என்று அனைவருமே வியப்படைந்தார்கள். உடுப்பி மன்னனிடமே இது பற்றி அவர்கள் கேட்டார்கள்.

"உணவு தயாரிக்கும் பணியை இத்தனை துல்லியமாக எப்படி நிர்வகிக்கிறீர்கள்?"

அதற்கு மன்னன் கூறிய பதில்,

"தினமும் இரவில் நான் பகவான் கிருஷ்ணனுடைய கூடாரத்துக்குச் செல்வேன். அவர், இரவு உணவாக வறுத்த கடலையே சாப்பிடுவது வழக்கம். எனவே, ஒரு கிண்ணத்தில் வறுத்த

கடலையைப் போட்டு அவரிடம் கொடுப்பேன். அவர் எத்தனை கடலை சாப்பிடுகிறார் என்பதை வைத்து, அடுத்த நாள் போரில் எத்தனை மரணங்கள் நிகழும் என்பதை கணக்கிட்டுக் கொள்வேன். உதாரணமாகக் கிருஷ்ணர் அன்று பத்துக் கடலை சாப்பிட்டார் என்றால், மறுநாள் போரில் பத்தாயிரம் வீரர்களின் இறப்பு நிகழும் என்று அர்த்தம்.

இதன்படி, எஞ்சியிருக்கக் கூடிய வீரர்களின் எண்ணிக்கைப்படி அவர்களுக்கான உணவை நான் தயாரித்துவிடுவேன்."

The wise and the virtuous are eyes to the ruler, who is diligent to choose people to surround.

Mahabharatha war, the so called, 'Gurukshethra war' occurred 5000 years ago. Some kings fought with the pandavas and some in favour of Gowravas. All the kings joined the war. But one king of Uduppi joined neither group but stayed neutral.

He told Krishna 'All those who are involved in this war as warriors who should have their meals. I would take the responsibility to prepare and supply the food that is needed for all of them during this war'

The war went on for 18 days. Warriors died in thousands every day.

To avoid any wastage of food, meals had to be prepared according to the exact number of warriors each day.

Even though nobody could know the exact number of death of warriors each day, it was a great surprise that not a single day during the war, even a small amount of food was wasted.

Everyone wondered as to how it was possible and they asked the king of Uduppi about this and how he was able to organise it perfectly.

He answered, 'Every night I go to Krishna's tent. Lord Krishna eats roasted peanuts for his dinner. So, I used to give some peanuts in a dish. How many peanuts he consumes on that particular day determined the number of deaths the next day.

For example, if he eats 'ten' peanuts, it means, the death of warriors next day would be ten thousand. So, from this, I calculate and prepare the food for the remaining number of warriors the next day.



# அருகி வருகின்ற பாரம்பரியக் கலைகள்

திரு காசிநாதர் இராசதுரை
மாவட்ட கலை கலாசார உத்தியோகத்தர், கிளிநொச்சி

கலை என்பது உணர்வுகளின் வெளிப்பாடு. நாம் காண்பது மட்டுமல்ல அறிந்தவைகளையும், பார்த்தவைகளையும், உணர்ந்தவைகளையும் மற்றவர்களுக்கு வெளிப்படுத்தும் ஓர் உத்தியே கலையாகும். பொதுவாக, கலைகள், அதனைப் படைப்பவர்களுக்கும் அக்கலையை இரசிப் பவர்களுக்கும் மனதுக்கு மகழ்ச்சி தருவதுடன், பல்வேறு வகையான செய்திகளையும், அறிவுரைகளையும், நற்பண்புகளையும், பண்பாட்டு விழுமியங்களையும் அறிவியல் சார்ந்த விடயங்களையும் பரப்புவதற்குக் கருவியாக அமைகின்றன. எனவேதான் வெறுமனே பார்த்து இரசிப்பதனை மட்டும் குறிக்கோளாகக் கொள்ளாமல் இரசிப் பவர்களைச் சிந்திக்கத் தூண்டும் கலைப் படைப்புக்கள் காலம் காலமாகப் படைக்கப்பட்டு வருகின்றன. இதனால் தான் கலை காலத்தால் அழியாதது என்னும் சிறப்பினைப்பெற்றது.

கலை என்பது ஒரு படைப்பு. ஒரு படைப்பாளியின் கைவண்ணத்தில் பிறப்பது. எந்தக்கலையை எடுத்துக்கொண்டாலும் அங்கு ஒரு படைப்பாளியாக மனிதன் நிச்சயம் தொடர்புபட்டிருப்பதனைக் காணலாம். மனிதனால் ஆக்கப்படாத எதனையும் நாம் கலை என்று குறிப்பிடுவது கிடையாது. நாம் வாழும் சூழலில் எம்மைச்சுற்றி ஏராளமான அழகிய பொருள்கள் இயற்கையாகவே காணப்படுகின்ற போதும் இயற்கையின் அழகை நாம் கலை என்றோ கலைப்பொருள் என்றோ குறிப்பிடுவதில்லை. வானத்தில் தெரியும் அழகிய மேகத் தூரிகைகளின் அழகையோ, கடலின் தாளத்திற்கு கரையில் ஆடும் அலைகளையோ, காட்டு மரங்களி லிருந்து ஒலிக்கும் சில்வண்டுகளின் ரீங்கார இசையையோ கலை என்று போற்றுவது கிடையாது. மாறாக இக்காட்சிகளை ஓவியமாகத் தீட்டினாலோ, ஒளிப்படமாகத் தொகுத்தாலோ, கவிதையாகப் படைத்தாலோ அது கலையாகிறது.

ஒரு குறிப்பிட்ட இனத்தின் பரம்பரையில் பிறக்கும் ஒருவருக்கு மரபணுக்கள் தலை முறைகளினூடாகத் தொடர்வதைப் போன்றே அக்குறிப்பிட்ட இனத்தின் அல்லது பரம்பரையின் வாழ்க்கை முறை தொடர்பான செய்திகளும் தொடர்கின்றன. இவற்றையே பாரம்பரியம் என்றும், பண்பாடென்றும், மரபென்றும், இன்னும் பல சொற்களிலும் குறிப்பிடுகின்றோம். சமய நம்பிக்கைகள், சடங்குகள், வாழ்க்கை முறைகள், போன்ற அனைத்துச் செய்திகளும் தலைமுறை களினூடாகக் கடத்தப்படுகின்றன. இவற்றை அடுத்த சந்ததியினருக்கு எடுத்துச்செல்ல முன்னோர்களால் உருவாக்கப்பட்ட கருவிகளே கலைகளாகும்.

ஆரம்ப காலங்களில் இக்கலைகள் செய்தி ஊடகங்களாகவே பார்க்கப்பட்டன. நாடகங்களிலும், பொம்மலாட்டங்களிலும், வில்லுப்பாடல்களிலும், கரகாட்டங்களிலும், நடனங்களிலும் மக்களுக்குத் தேவையான பலதரப்பட்ட விடயங்கள் பரப்பப்பட்டன. நாட்டுப்புறக்கலைகள் நமது மண்ணோடும், நம்மோடும் தொடர்புடையவை. ஆடாதவரையும் ஆடவைக்கும், பாடாதவரையும் பாடவைக்கும் இவை, தமிழரின் வாழ்வியலோடு இரண்டறக் கலந்தவை. சமுதாயத்தின் ஆவணமாகவும், தகவல் பரப்பும் ஊடகமாகவும், பழக்கவழக்கப் பண்பாட்டுப் பெட்டகமாகவும் திகழ்ந்துள்ளன.

தமிழர்களுடைய மரபுவழிக் கலைவடிவங்கள் சமயம் சார்ந்ததாகவும், தொழில் சார்ந்ததாகவும் காணப்படுகின்றன. கரகாட்டம், வேதாளஆட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், சிலம்பாட்டம், காவடி யாட்டம், வேடராட்டம், புலியாட்டம், ராஜாராணி ஆட்டம், காளையாட்டம், கழியாட்டம், பேய் ஆட்டம், கொம்புமுறி விளையாட்டு, வில்லுப்பாட்டு, கும்மியாட்டம், குரவையாட்டம், வேலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், ஏந்தல் ஆட்டம், தீப்பந்தம் சுற்றுதல், முகமூடி ஆட்டம், குரவை ஆட்டம், குறவன் குறத்தி ஆட்டம், தப்பாட்டம், பறைமேளக்கூத்து, வசந்தன் கூத்து, தெருக்கூத்து, மகுடிக்கூத்து, நாட்டுக்கூத்து, அறக்கூத்து, காமன் கூத்து, கணியான் கூத்து, தோற்பாவைக் கூத்து போன்ற கலைகளும், வேறு பிறகலைகளும் தமிழர்களின் பண்பாட்டைப் பறைசாற்றுகின்ற நிகழ்த்துக் கலைகளாகும்.

இக்கலைகளில் பெரும்பாலான கலை வடிவங்கள் சமயச் சடங்குகள், திருவிழாக்கள், சமய விழாக்கள் என்பவற்றுடன் தொடர்புபட்டுள்ளன. வழிபாட்டுக் கலை களாகவும் நேர்த்திக்கடன் தீர்க்கும் கலை களாகவும், புராண இதிகாச கதைகளை எடுத்தியம்பும் கலைகளாகவும் காணப் படுகின்றன. ஏனையவை தொழில் சார்ந்த கலைகளாகவும் காணப்படுகின்றன.

கிராமங்கள் தோறும் இராமாயணத்தையும், மகாபாரதத்தையும் இக்கலைகள் எடுத்துரைத்தன. கண்ணகி, கோவலன் கதை களைக் கற்றுக்கொடுத்தன. சமூகத்தின் பண்பாட்டை வீதிதோறும் எடுத்துரைத்தன. நீதியை முன்னெடுத்துச் சென்றன. அறத்தை வலியுறுத்தின. விருந்தோம்பலை வீடுதோறும் கொண்டு சேர்த்தன. படிக்காத பாமரனுக்கும் சிலப்பதிகாரத்தையும், கந்தபுராணத்தையும் கற்றுக்கொடுத்தன. காதலையும், வீரத்தையும் சுட்டிக்காட்டின. பொய்யே பேசாத அரிச்சந்திரனை ஊருக்கும், உலகுக்கும், எடுத்துக்காட்டி உண்மை பேச வலியுறுத்தின. கிராமப்புறத் தெய்வங்களான மாரியம்மன், காளி, சிவன், முருகன், போன்ற தெய்வங்களின் வரலாற்றினைக் கதைகள் மூலம் எடுத்துக்கூறித் தெய்வ நம்பிக்கையை வளர்த்தன. எளிமையான நடையாலும், பேச்சு வழக்கினாலும் கதைகளைப் புரியவைத்து மக்களை இரசிக்கவைத்தன.



மக்களால் மதிக்கப்பட்ட இக்கலைகளில் ஒன்றான வில்லுப்பாட்டு முருகன், வள்ளி, தெய்வானை போன்றோரின் வாழ்க்கை வரலாற்றினை எடுத்து இயம்பியது. தோற்பாவைக் கூத்து ராமாயணத்தில் உள்ள ராமனையும், சீதையையும் மூலை முடுக்கெல்லாம் கொண்டு சென்றது. தலையில் உள்ள கரகம் கீழே விழாமல் ஆடும் கரகாட்டம், வித்தைகளில் வித்தையாக உலக மக்களால் இரசிக்கப்பட்டது. பாமரப்பெண்கள் சொல்லும் கும்மிப்பாடல்கள் எதுகையும், மோனையும் தன்னகத்தே கொண்டு இளையோர் மனங்களை இன்புறச்செய்தன. இப்பாடல்கள் குல தெய்வத்தையும், காவல் தெய்வத்தையும் கண்முன் கொண்டுவந்து நிறுத்தின. அலங்கரிக்கப்பட்ட செம்பு அல்லது பித்தளைக் குடத்தைத் தலையில் வைத்துக்கொண்டு நாதஸ்வரம், தவில் இசைக்கு ஏற்றவாறு குடம் அல்லது செம்பு கீழே விழாதவாறு பெண்களும் ஆண்களும் ஆடும் ஆட்டம் கரகாட்டம் எனப்படும். செம்பின் வாய்ப்பகுதியில் தேங்காயை வைத்து அதன் மேல் குடை போன்று அலங்கரிக்கப்பட்டு அதன் மேல் ஒரு கிளிப்பொம்மையைச் செருகி இருக்கும் கரகத்தைத் தலையில் சுமந்து சுழன்று ஆடும்பொழுது கிளி பறப்பது போல அழகாக இருக்கும். இக்கரகாட்டம் ஆலயங்களில் திரு விழாக்களின் போதும், கலாசார நிகழ்வுகளிலும் ஆற்றுகைப் படுத்தப்படுகின்றன.

குதிரைக்கூடு அணிந்து அதன் மேல் சவாரி செய்வதுபோல் பாங்கு செய்து கால்களில் கட்டையைக் கட்டிக்கொண்டு ஆடப்படும் ஆட்டம் பொய்க்கால் குதிரை ஆட்டமாகும். இதில் ஆடும் ஆணும் பெண்ணும் ராஜா ராணி போல ஒப்பனைசெய்து அங்கும், இங்கும் தாளத்திற்கு ஏற்ப அசைந்து கொண்டே ஆடுவர். இதனால் பொய்க்கால் குதிரையாட்டத்தில் நடத்தல், ஓடுதல், குதித்தல், குனிதல், நிமிர்தல், கால் தூக்கி ஆடுதல், முன்புறம் செல்லுதல், பின்புறம் செல்லுதல், பக்கவாட்டுகளில் செல்லுதல் என்பன பார்ப்பவரின் கண்களுக்கு விருந்தளிக்கின்றன.



தப்பு என்னும் தோலிசைக் கருவியை அடித்து இசையெழுப்பி அதற்கேற்ப ஆடும் ஆட்டம் தப்பாட்டம் ஆகும். இதுவே தமிழர்களின் பாரம்பரிய நடனமாகும். இது பறையாட்டம் பறையடித்தல், தப்படித்தல் என்றும் குறிப்பிடப்படுகிறது. தப்பாட்டம் ஆடுவோர் நேர்வரிசையிலும், எதிர் எதிராக நின்றும், வட்டமாகவும் ஆடுகின்றனர். சுழன்று ஆடுதல், குதித்தல், பல்டி அடித்தல் போன்ற விறு விறுப்பான ஆட்டமுறைகளும் பின்பற்றப் படுகின்றன. ஆண்களால் மட்டுமே நிகழ்த்தப்பட்ட இக்கலையினை பெண்களும் தற்போது ஆடி வருகின்றனர்.

கிராமக் கோயில் விழாக் காலங்களில் ஆடப்படுகின்ற ஆட்டமாக ஒயிலாட்டம் விளங்குகிறது. இதிகாச புராண வரலாற்றுக் கதைகளே ஒயிலாட்டத்தில் பாடப்படும். கட்டப்பொம்மன், மதுரைவீரன், வள்ளி திருமணம் போன்ற கதைகள் இடம்பெறும். ஒரே நிறத் துணியைத் தலையில் கட்டிக்கொண்டு கையில் ஒரே நிறத்திலான துண்டு ஒன்றைவைத்து இசைக்கேற்ப வீசி ஆடும் அழகான குழு ஆட்டமாக இது விளங்குகிறது. மயில் இறகுகளை இடுப்பில் கட்டி மயிலைப்போல் தோகையை விரித்து தாளத்திற்கு ஏற்றபடி ஆடுவது மயிலாட்டம் ஆகும். ஆலயங்களிலும் பொது நிகழ்வுகளிலும் இக்கலை ஆற்றுகைப்படுத்தப்பட்டன. கரகாட்டத்தின் துணையாட்டமாகவும் இடை நிகழ்ச்சியாகவும் இவ்வாட்டம் நிகழ்த்தப் படுகிறது.

சமய உணர்வுக்காகப் பொது நிகழ்வுகளில் நிகழ்த்தப்படுவது காவடியாட்டமாகும். நேர்த்திக்கடனைத் தீர்க்கும் ஒரு சடங்காக இது இடம்பெறும். நேர்த்திக்காக எடுப்போர் கன்னத்திலும், முதுகிலும், அலகிலும் செடில்கள் குத்திக் காவடியுடன் ஆடுவார்கள். வேற்காவடி, பன்னீரக் காவடி, சந்தனக்காவடி, சேவற் காவடி, தூக்குக் காவடி, பறவைக் காவடி, பாற்காவடி, எனப் பலவித காவடிகள் எடுப்பார்கள். கலைத்திறனும் ஆடல் நுட்பமும் இதில் மிகுதியாக இருக்கும்.

நாட்டுப்புறக் கலைகளில் மிகச்சிறந்தது வில்லுப்பாட்டாகும். வில்லை முதன்மைக் கருவியாகவும், உடுக்கு, குடம், தாளம், கட்டை ஆகியவற்றைத் துணைக் கருவிகளாகவும் கொண்டு இக்கலை நடத்தப்படுகிறது. இந்தக் குழுவிலே குறைந்தது ஐந்து பேர் இருப்பர். தலைவர் கதையைப் பாட்டாகக் கூறிச்செல்லும் போது மற்றைய இருவர் விளக்க வேண்டிய இடத்தில் விளக்கி, உரைநடையாகக் கூறுவர். தெய்வங்களின் வரலாறு, தெய்வநிலை பெற்ற வீரர்களின் வரலாறு, அரசர்களின் வரலாறு இவற்றை மக்களுக்கு எடுத்துக்கூறவே வில்லுப்பாட்டுப் பயன்படுத்தப்பட்டது.



பிறகலைகளைப் போன்றே கூத்துக்கலையும் தெய்வ வழிபாட்டோடு தொடர்புடைய திரௌபதி, மாரியம்மன், சிவன், திருமால், கணேசன் ஆகியோருக்கு எடுக்கப்படும் விழாக்களில் நிகழ்த்தப்பட்டு வருகிறது. தற்பொழுது மக்களுக்கு விழிப்பூட்டும் கருத்துக்களைச் சொல்வதற்கும் பயன்படுத்தப் படுகிறது. தெருக்கூத்தில் முதன்முதலாக அரங்கினுள் நுழையும் பாத்திரம் கட்டியக்காரன் ஆவான். அவன் கூத்தின் நடுநாயகமான பாத்திரமாகி, அரசனைப் புகழ்பவனாகவும், தூதுவனாகவும், வேலைக்காரன் ஆகவும், கோமாளியாகவும், பொதுமக்களுள் ஒருவனாகவும், மாறி மாறிப் பாடுவான். கூத்தைத்துவக்கி, காட்சிகளை விளக்கி கதை களைத் தெளிவுபடுத்தி அறிவுரைகளைக் கூறுவதுடன் கூத்தை முடிக்கும் பல வேலை களையும் செய்பவனாக கட்டியக்காரன் தெருக்கூத்தில் இடம் பெறுகிறான். கூத்தின் இறுதிக்கட்டம் பொதுவசனம், முடிவுப்பாட்டு மங்களம் பாடுவதோடு முடிவுறும்.

காட்டினில் வாழ்ந்த பூர்வீக மக்கள் கொடிய விலங்குகளிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக பல வித்தைகளைக் கற்றுக் கொண்டனர். அதில் சிலம்படியும் ஒன்றாகும். இது பிற்காலத்தில் கலை வடிவமாக எழுச்சி பெற்றது. சிலம்பாட்டம் என்பது தமிழர்களின் வீர விளையாட்டாகும். இரு கம்புகளைக் கொண்டு ஒலியெழுப்பி விளையாடும் கலையாகும்.

கோலாட்டம் என்பது பெண்களுக்கென்றே உரிய ஆட்டமாகும். இரண்டு கோல்களைப் பயன்படுத்தி ஒன்றுடன் ஒன்று மோதி ஒலியெழுப்பி ஆடுகின்ற ஆட்டமே கோலாட்டமாகும். கும்மியாட்டம் என்பது ஒருவர் முதலில் பாட, அதனைத் தொடர்ந்து பெண்கள் குழுவாகச் சேர்ந்து பாடுதலாகும்.

உறியடி விளையாட்டு என்பது கோயில் சார்ந்த கலையாகக் கருதப்படுகிறது. பத்து அல்லது எட்டு அடி உயரத்தில் உறி தொங்கிக்கொண்டு இருக்கும். உறியை அடிப்பவர் கண்களைக் கட்டிக்கொண்டு மூன்று அடி நீளமுள்ள கம்பினால் அடிப்பர். இது விளையாட்டு நிகழ்வுகளில் முக்கிய நிகழ்வாக இடம்பெறுவது என்றும் அழிவுறாத கலையாக மிளிரும் என்பதனை எடுத்தியம்புகிறது.

மழையின்றித் தவிக்கும் காலத்தில் பல ஊர்களில் உடுக்கடிப்பாட்டு நடத்தப்படும் கிராமப்புறங்களிலுள்ள சிறு ஆலயங்களில் கலை ஆடிக் குறி சொல்லும் ஆலயங்களில் கூடுதலாக உடுக்கை அடித்து தெய்வங்களைப் புகழ்ந்து பாடும்மரபு இன்றும் பல ஆலயங்களில் இடம்பெறுகிறது. காத்தவராயன் கதையைப் பாடுவதற்கும் இக்கலை பயன்படுத்தப்படுகிறது.

சில கலைகள் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன. பல மாற்றமுற்று அதன் தனித்தன்மையினை இழந்துள்ளன. இதற்கு பல்வேறு சமூகச் சூழல்கள் காரணமாக இருந்தாலும் அதனை மீட்டெடுப்பது என்பது சமூகத்தின் கடமையாகவே உள்ளது.

தம்மையும், தம்மைச் சார்ந்தவரையும், தாம் வணங்கும் தெய்வத்தையும் மகிழ்ச்சிப்படுத்தப் பயன்படுத்தப்பட்ட கலைகள் மாற்றமுற்று அருகி வருகின்றன. இசைக்கு மயங்காத உயிர்கள் இல்லை. இசைக்குத் தெய்வமும் இறங்கிவரும் என்பது நமது கலையின் சிறப்பு இவ்வாறாக வாழ்வியலுக்கும், வழிபாட்டுக்கும் வழிகாட்டிய நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகள், இன்று மெல்ல மெல்லத் தடம் அழிந்து கொண்டு இருக்கின்றன என்பது வேதனைக் குரியதாகும்.

பறை அடிப்பவர்கள் தீண்டத்தகாதவர்கள் என்ற மனப்பாங்கு உள்ள இச்சமூகத்தில் பறை மேளக்கூத்து போன்றவற்றைப் பழகுவதையும் அரங்கேற்றுவதையும் புதிய தலைமுறையினர் தவிர்ப்பது தவிர்க்க முடியாததாகின்றது. இதுபோன்ற யதார்த்தங்களும் பாரம்பரியக் கலைகள் மருவி வருவதற்கான மற்றுமொரு காரணமாகும்.

பெற்றோரும் தமது பிள்ளைகளுக்கு எதிர் காலத்தில் நிரந்தர வருமானம், உழைக்கும் தொழில் முறைக்கல்வியையே முன்னுரிமைப் படுத்துவதோடு, பிள்ளைகள் தாமாகவே கலைகளின் பக்கம் ஈர்க்கப்பட்டாலும் கூட பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெறுவதனைக் கருத்திற்கொண்டு பிள்ளை களின் கலையார்வத்தைக் கலைத்துவிடும் நிலமைகளும் காணப்படுகின்றன.

கால மாற்றத்தாலும் நவீன கருவிகளின் வருகையாலும் சில கலைவடிவங்களின் தேவைகள் மங்கிவிட்டன. சித்திரப்பிரதிமை (portrait) என்பது ஓவியக்கலையின் ஓர் உன்னத வடிவமாகும். ஒரு நபரின் முகத்தை அப்படியே அவரின் அந்தக்கணத்தின் மன நிலையைப் பிரதிபலிப்பதாக வரைவது சித்திரப்பிரதிமை எனப்படும். நாட்கணக்கில் வரையப்படும் இக்கலை வடிவத்தில் நவீன ஒளிப்படக் கருவிகளின் வருகை மிகப்பெரும் தாக்கத்தினைச் செலுத்தியிருக்கிறது. மின்னல் வெட்டும் நேரத்தில் படமெடுத்து, பிரதியெடுத்து விடலாம். அவ்வாறே மாதக்கணக்கில் இராட்சத அளவில் வரையப்பட்டு வந்த விளம்பர ஓவியங்களும், சினிமாப் பதாதைகளும் (Cut out) கணினியின் துணையுடன் சில மணித்தியாலங்களில் சாத்தியமாகின்றன.

கலைகளைக் கற்பிக்கின்றவர்கள், ஆற்றுகைப் படுத்தும் கலைஞர்கள் போன்றோருக்கு அவர்களது வாழ்க்கைச் செலவினைச் செய்யு மளவிற்கு இவற்றிலிருந்து கிடைக்கின்ற வருமானம் போதாமல் உள்ளதால், இக் கலைகளில் நாட்டங்கொள்ளாது கலைஞர்கள் வேறு தொழில்களுக்குச் செல்லவேண்டிய கட்டாயத்துக்கு ஆளாக்கப்படுகின்றனர். கலைத்துறையில் ஆழமான புலமையும், நுட்பமான கலை நுணுக்கங்களையும் தன்னகத்தே கொண்ட மூத்த கலைஞர்களின் பங்களிப்பின்றி ஆற்றுகைப்படுத்தப்படுகின்ற கலைகள் சோபையிழந்து போகின்றமையால் கலை நிகழ்வுகளைப் பார்த்து இரசிப்பதற்கு போகிறவர்களின் வீதம் குறைந்து வருகின்றமை கவனத்திலெடுக்க வேண்டிய விடயமாகும்.

நவீன தொழில் நுட்பங்களையும், கருவி களையும், கணினிப் பயன்பாட்டையும், இலத்திரனியல் ஊடகங்களையும், சமூக வலைத்தளங்களையும் ஒதுக்கிவிட்டு எம் கலைகளை வளர்ப்பதென்பது இனிவருங் காலங்களில் சாத்தியமற்றதாகி வருகின்றது. எமது கலை மரபுகளைக் காலக்குதிரையின் முதுகின் மீது ஏற்றிவிடாமலும் அதேவேளை, அதன் கடிவாளத்தை விட்டுவிடாமலும், அதற்குச் சமாந்தரமாகப் பயணிக்க வேண்டிய கடப்பாடு ஒவ்வொரு கலைஞனுக்கும் உண்டு. முன்னோர்களின் சொல்லையும், பொருளையும் மட்டும் அல்லாது அவர்கள் மேற்கொண்ட செயல்களையும் படைத்த கலைகளையும் அவ்வாறே பின்பற்றுவது தான் மரபு. இன்று நேரமின்மை காரணமாகவும், இடப் பற்றாக குறையினாலும், போதிய தெளிவின்மையாலும் எமது கலை, கலாசார நிகழ்வுகள் சில மரபை மீறியதாக நிகழ்த்தத் தலைப்படுகின்றன.

நாட்டியக்கலையில் பின்பாட்டுக்காரர்கள் ஒரு முக்கிய அங்கமாகும். ஆனால், சில மேடை நிகழ்வுகளில் பின்பாட்டுக்காரர்களைக் காணக் கிடைப்பதில்லை. அவர்களின் இடத்தை இசைத்தட்டுக்களும், ஒலிநாடாக்களும், ஈடு செய்கின்றன. ஆனால், அவை எமது மரபன்று. இசையும், நாடகமும் ஒலி, ஒளி வடிவங்களாகப் பதிவு செய்யப்பட்டு கணினி மூலம் தொகுக்கப்பட்டு வெளியிடப்படுவதுடன் சமூக வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்யப் படுவதாலும், அது பலரைச் சென்றடைகிறது. இதனால் கலைவிழாக்களில் இரசிகர்களின் பிரசன்னம் மிகவும் குறைந்தளவிலேயே காணப்படுகிறது.

ஒலி வாங்கிகளும், ஒலிபெருக்கிகளும் கண்ணைக் கவரும் பலவர்ணங்களில் பாய்ச்சப்படும். ஒளிவெள்ளமும் இன்று மேடை நிகழ்வுகளுக்குக் கூடுதல் பெறுமதி சேர்க்கின்றன. மேடையில் தோன்றும் கலைஞன் சாதாரண குரலில் பேசுவதையோ அல்லது படுவதையோ அரங்கின் பின்வரிசைப் பார்வையாளன்வரை கொண்டு சேர்ப்பதில் ஒலிபெருக்கிச் சாதனங்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன.

நவீன தொழில்நுட்ப வசதிகள் எமது கலை களைப் பழகுவதிலும், அரங்கேற்றுவதிலும், மாத்திரம் கைகொடுக்கவில்லை. மாறாக அவற்றை ஆணைப்படுத்துவதிலும், பிற நாடுகளில் சமூகங்களுக்கு மத்தியில் அவற்றின் சிறப்பம்சங்களை எடுத்தியம்பவும் பெருமை பேசவும் பயன்படுகின்றன. இவ்வாறான விளம்பரப்படுத்தல் செயற்பாடுகளின்றி ஓர் கலையின் ஆயுளை நீடிக்க முடியாது என்பதும் யதார்த்தமே.

ஒரு கலையைப் படைப்பவனின் உத்திகளும் சிந்தனைகளும் மெருகேற அதற்கேற்றாற்போல் பார்வையாளனின் இரசிப்புத்திறனும் வளர வேண்டியது அவசியமாகிறது. அந்த வகையில் பார்வையாளனைத் தயார்படுத்தும் பொறுப்பும் கலையைப் படைப்பவனையே சாரும். இவ்வாறு நவீன தொழில்நுட்ப வசதிகளையும் வாய்ப்புக்களையும் உள் வாங்கிக்கொண்டு இக்கலைத்துறையில் ஈடுபடுபவர்கள் எமது பாரம்பரியக் கலைகளை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்வார்கள் என்பதில் ஐயமில்லை.

இசை, நாடகத்துறைகளைப் பொறுத்தமட்டில் இத்தொழில்நுட்பப் பயன்பாடுகள் அக் கலைகளில் பாரியமாற்றங்களை ஏற்படுத்துவ தில்லை. ஆனால் அக்கலைகளைப் பார்வை யாளனிடம் கொண்டு சேர்க்கும் உத்தியில் தான் தாக்கம் செலுத்துகின்றன. உதாரணமாக நவீனதொழில் நுட்பங்களின் ஆதிக்கத்தினால் கூத்தின் பிரதான அம்சங்களான களரிகட்டுதலோ, பின்பாட்டுக்காரர்களோ, இசைக்கருவிகளோ, கட்டியக்கரர்களோ, ஏன் ஆடை அணிகலன்களோ இன்றும் கூட மாறிவிடவில்லை. இவ்வாறு மாறாமல் மரபைப்பேணுவது அக்கலையில் ஈடுபடும் ஒவ்வொரு கலைஞனதும் கடமையாகும்.

திரைப்படம், தொலைக்காட்சி முதலிய பொழு துபோக்குச் சாதனங்கள் கிராம மக்களின் சமூக வாழ்க்கையை பாத்தித்துக்கொண்டு வந்தாலும், நையாண்டி மேளம், கரகம், காவடி, பொய்க்கால் குதிரை முதலிய பாரம்பரிய கலைவடிவங்கள் மண்ணின் மணத்தோடு செழித்து வளர வேண்டும் என்பதுதான் எல்லோரது கனவாகும்.

முற்றத்திலிட்ட அரிசிமாக்கோலம் இன்று அச்சடிக்கப்பட்டு ஒட்டும் வடிவிலிருக்கிறது. வாசலில் தொங்கும் மாவிலை, தோரணம் கடதாசியில் வந்தாயிற்று. விறகடுப்பு மூட்டி வாசலில் வைத்த பொங்கல் பானை சமையல் அறைக்குள் சென்று எரிவாயு அடுப்பில் ஏறிவிட்டது. அடுக்குமாடிக் குடியிருப்புகளில் நிலவும் இடப்பிரச்சினை, பரபரப்பான வாழ்க்கை போன்றவை இந்நிலைக்குக் காரணமாக இருப்பதுடன் அதைத் தவறென்று கூறமுடியாது. இருப்பினும் அவை எமது மரபல்ல.

இவ்வாறான மரபை மீறும் செயற்பாடுகள் தொடருமேயானால் நிச்சயமாக அடுத்துவரும் சந்ததியினரிடம் நாம் எமது அடையாளங்களைத் தொலைத்தவர்களாகவே வாழ்வோம். மரபின் முக்கிய அம்சங்களே பழமையைப் பேணுதலும், எம் முன்னோர்கள் சொன்னதைக் கண்ணெனப் போற்றுதலும் தான்.

ஏனெனில், எமது முன்னோர்கள் கண்டறிந்து சொல்லிய உண்மைகளும், நன்மைகளுமே தலைமுறை தலைமுறையாகக் கடைப் பிடிக்கப்பட்டு வந்து, இன்று மரபாக நிலைத்திருக்கின்றது.

கலைகள் என்பவை எமது முன்னோர்கள் பயணம் செய்த பாதைகள்; மனப்பாரங்களை இறக்கிவைக்க அமைக்கப்பட்ட சுமைதாங்கிகள்; வாழ்க்கையின் வாசலை அலங்கரிக்க அவர்கள் கட்டிய அழகிய தோரணங்கள். எமது வாழ்க்கையை, அவ்வழகிய பாதையினூடாக பயணிக்க நாம் கடமைப்பட்டவர்கள். பாதையைச் செப்பனிடுவதும், அலங்கரிப்பதும் இன்றைய காலத்தின் தேவையாக இருக்கலாம். ஆனால் பழமை மாறாதிருப்பதை அனைத்துக் கலைஞர்களும் உறுதிப்படுத்திக் கொள்ளுவது அவசியமாகும். நவீனத்துவச் சிந்தனைகள் கலைத்தோரணங்களைக் கலைத்துவிடக் கூடாது

என்ற எண்ணம் படைப்பாளிக்கும் இருக்கவேண்டும். பார்த்து இரசிப்பவர்களுக்கும் அந்த எண்ணம் வரவேண்டும்.

பல தனியார் கல்வி நிறுவனங்கள் கர்நாடக இசையைக் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்கின்றன. ஆனால், நாட்டுபுறக் கலைகளை மாணவர்கள் தெரிந்து கொள்ளக்கூடிய வாய்ப்புக்கள் இல்லை. காணாமல்போன கலைகளை மீட்டெடுத்து கலைகளையும், கலைஞர்களையும், கதைக் கருவினையும் கட்டிக்காப்பது நமது கடமை. அப்பொழுதுதான் அடுத்த தலைமுறைக்கு இதன் ஆழமும், அழகும் தெரியவரும். இல்லையெனில் ஏட்டில் மட்டும் தான் படித்துக் கொள்ளமுடியும்; இக்கலைகள் எப்படி இருக்கும் என்று கற்பனை கூட செய்து பார்க்கமுடியாது.

காலவெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட தமிழர் கலைகளை மீட்டெடுத்துத் தமிழர் பண்பாட்டைப் பறைசாற்றுவோம்.

இவ்வாறு பல்வேறு சவால்கள் காணப்படினும் கலைகள் முற்றுமுழுதாக முடங்கிப்போய் விடவில்லை. கலாசாரம் சார்ந்த அமைச்சு, திணைக்களங்கள், மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள், துறைசார்ந்த உத்தியோகத்தர்கள், கிராமமட்டக் கலைக் குழுக்கள், கலாசாரச் சங்கங்கள், கலை நிறுவனங்கள், கலைஞர்கள், கலை ஆர்வலர்கள் எனப் பல்வேறு மட்டங்களில் இன்று இக்கலைகளுக்குப் புத்துயிர் கொடுக்கும் வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றன.

கலாசார விழாக்களை ஒழுங்கமைத்து நடாத்துவதன் மூலம் இளந் தலைமுறையினர் பாரம்பரிய கலைகளை அறிந்துகொள்வதற்கும் அதனை அடுத்த சந்ததியினருக்கு காவிச் செல்வதற்கும் வழிகோலுவதுடன் நூல்கள், சஞ்சிகைகள், ஒலி, ஒளிப் பேழைகள், புகைப்படப் பிரதிகள் என்பவற்றினை வெளியிடுவதன் மூலம் அந்தந்தப் பிரதேசங்களுக்கே உரித்தான பாரம்பரிய கலைகளையும், கலை வடிவங்களையும் பேணிப் பாதுகாத்து அடுத்த சந்ததியினருக்கு கையளிக்கின்ற சிறப்பான செயற்பாடாகவும் இவை அமைகின்றன.

# பெரியபுராணத்தின் பெருமை

பெரியபுராணத்தின் பெருமையை உணர்ந்து அதில் ஆராமை கொண்ட ஒரு மகான் ஆறுமுக நாவலர் அவர்கள். அவர்கள் பெரியபுராணத்தை வசனஞ்செய்து அதற்கு ஒரு சூசனமும் உரையுஞ் செய்யக் கருதினார்கள். சூசனந் தொடங்கிக் காரைக்கால் அம்மையார் வரை நடந்தும்விட்டது. அப்பொழுது அவர்கள் வயசு முப்பது. அப்பால் இருபத்தாறு வருஷம் வாழ்ந்திருக்கிறார்கள். காரைக்கால் அம்மையாரில் நின்றது நின்றதுதான். அதற்கு அப்பாலும் எழுத ஆறுதரம் முயன்றார்கள். ஆறு தரமும் தீராத இடையூறு நேர்ந்தது. திருவருட் சம்மதம் இல்லையென்றே நிறுத்திவிட்டார்கள். இது அவர்கள் பெருமை.

நாயன்மார் வாழ்க்கை வேறு; நம் வாழ்க்கை வேறு. கனவு நிலையில் துயில்வோர் விழிப்பு நிலையில் உள்ளவர்கள் பற்றிச் சொல்ல முடியுமா! பிரபஞ்சத்தைப் பாராது பார்த்த நாயன்மார் நிலையை, நம் நிலையில் வைத்து, பெண்ணை ஒருவருக்குக் கொடுக்கலாமா, பிள்ளையைக் கறிசமைக்கலாமா என்று பேச எமக்கு உரிமை ஏது? எமக்கு, எம் நிலைக்கு அவை சாதகமல்ல. இதனைச் சிறிதும் சிந்தியாமல் நமது தாய்த்தேசம் - பாரததேசம் நடக்கிறது. அதைப் பார்க்க மனம் புண்ணாகின்றது.

நன்றி: சிந்தனைக் களஞ்சியம்
இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி கணபதிப்பிள்ளை.

# கேள்வியும் பதிலும்

**சிவன் படத்தை வீட்டில் வைத்து வணங்கக் கூடாது என்கிறார்களே, சரியா?**

கல்வி, கேள்வி இல்லாத மக்கள் உலகத்தில் நிறைய இருக்கிறார்கள். சாதாரணமாகப் பார்க்கும் போது பட்டப்படிப்புப் படித்தவர்கள் நிறையப்பேர் இருக்கிறார்கள். ஆனால், சிவ சம்பந்தமான ஞான நூல்களைக் கற்றவர்கள் கேட்டவர்கள் மிகக்குறைவு. மனிதனுக்கு முக்கியமானது எதுவென்று கேட்டால், பக்தி முக்கியமானது. இந்த உலகத்தை, உடம்பைப் படைத்தவன் எல்லாவகையான நன்மைகளையும் உயிர்களுக்குச் செய்பவன் சிவன் ஒருவனே. சூரியனை வரச் சொன்னவனும் சிவபெருமானே. சூரியனை நாம் படைக்கவில்லை. அதே போல் உலகில் எல்லாப் பொருள்களையும் படைத்து வாழ வைக்கிறான் சிவபெருமான். அந்தச் சிவபெருமான் எப்படி இருக்கிறான் என்றால், சோதி மயமாக இருக்கிறான். அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாக ஆனந்த மூர்த்தியாக இருக்கிறான். அப்படிச் சோதி மயமாக இருக்கும் சுவாமியை உயிர்களால் காண முடியாது. "சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே" என்பது சிவபுராணம். அதனால் அப்படி அருவ நிலையாய், சோதியாய் இருக்கும் கடவுளைக் காணமுடியாது. அப்படிக் காண முடியவில்லை என்றால், பக்தி செய்ய முடியாது. உபகாரம் செய்த சுவாமியைக் கும்பிட வேண்டும். நன்றி சொல்ல வேண்டும். அதற்காக சோதியாக இருந்த அந்தச் சுவாமியை எமது அறிவுக்குத் தகுந்தாற் போல, நம்முடைய தன்மையை உணர்ந்து நாம் வாழ வேண்டும் என்பதற்காக அவனே உருவங்கொண்டுவந்து நடராஜராக, சிவலிங்கமாக இன்னும் பல திருவுருவங்களாக எழுந்தருளி இருந்து, அந்த உருவத்தைக் காண வைத்து, காண்பதனால் அன்பை உண்டாக்கி, அந்த அன்பின் மூலமாக அருள் கொடுக்கிறான். அதனால் அவசியமாக வீட்டில் சிவபெருமானுடைய படங்கள் இருக்க வேண்டும். சிவலிங்கம் இருக்க வேண்டும். முறையாகத் தீட்சை பெற்று சிவபூசை பண்ண வேண்டும். அப்படி இல்லை என்றால் சிவபெருமானின் படங்கள் அம்பாள், பிள்ளையார், முருகன் என, குடும்பத்துடன் இருக்கும் படங்கள் இருக்கின்றன. அது மட்டுமல்ல, சிவலிங்கம், அம்பாள், விநாயகர், சுப்பிரமணியர் முதலான சிவத்திருமேனிகளை வீட்டில் வைத்துக் கும்பிட வேண்டும். சாமியைக் கண்ணால், உருவத்தால் கண்டால் தான் பக்தி வரும்.

"ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லார்க் காயிரம்
திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ"

அதனால் உருவத் திருமேனியை வீட்டில் வைத்து தினம் தோறும் வழிபாடு செய்ய வேண்டும். வழிபாடு செய்த பின்தான் சாப்பிட வேண்டும். வழிபாடு செய்யவில்லை என்றால் சாப்பிடக் கூடாது. "உண்பதன் முன் மலர் பறித்திட் டுண்ணாராயில்" என்று கூறுவர்.

முறையாகக் குருவினிடத்தில் தீட்சை பெற்று ஆகம முறைப்படி பூசை செய்வது ஒன்று. அப்படி இல்லை எனில், பொதுமக்கள் சாமியின் படத்தின் முன் ஒரு பூவைப் பறித்து வைத்துத் தேவாரம் திருவாசகம் பாடிக் கர்ப்பூரம் ஏற்றிக் கும்பிட்டுவிட்டுச் சாப்பிடலாம். வீட்டில் சிவன் சம்பந்தமான திருமேனி உள்ள படங்கள் இருக்க வேண்டும்.

சூரிய ஒளிக்குள் எல்லா ஒளிகளும் அடங்குவது போலச் சிவபெருமானின் ஆற்றலுக்குள், அருளுக்குள் எல்லாம் அடங்கிவிடும்.

**எல்லாம் விதிப்படிதான் நடக்கும் என்றால் சாமிகளை ஏன் கும்பிட வேண்டும்?**

விதி என்பது எதனால் வந்தது என்றால் நாம் செய்யும் வினையினால் வந்தது. மனம், வாக்கு, காயங்களால் செய்யப்படும் பாவ புண்ணியங்களின் கணக்கு ஏறி நமக்கு, உயிருக்கு இன்ப துன்பங்களைக் கொடுப்பதற்கு வினை துணையாக இருப்பது. அந்த வினையின் மூலமாக வருவது பலன். அது விதி எனப்படும். வினையினாலே வந்தது விதி. அந்த விதியை பிரம்மா, இன்ன பலனை நீ இப்படித்தான் அடைவாய் என்று தலையில் எழுதிவிடுவார். இன்பத்தை அடைவாய், துன்பத்தை அடைவாய் என்று எழுதி விடுவார். அதற்குப் பெயர் தான் விதி. பிரமனுக்கே விதி என்று பெயர் இருக்கிறது. விதியின்படி தான் எல்லாம் நடக்கும். அதில் எந்த சந்தேகமும் இல்லை. விதியினை வெல்ல முடியாது.

“வெஞ்சின விதியை வெல்ல வல்லமோ” என்பது கம்பராமாயணம். அதனால் விதி அதிக பல முடையது. விதியை ஊழ் என்றும் சொல்வர்.

“ஊழிற் பெருவழி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துரை”

என்பது திருக்குறள். அதனால் விதிப்படிதான் எல்லாம் நடக்கும். அதில் எந்தவிதச் சந்தேகமும் இல்லை. ஆனால், எல்லாவற்றுக்கும் மேலாக இருக்கின்ற பரமேஸ்வரனை மனம், வாக்கு, காயங்களால் நன்றாக வழிபாடு செய்தோமானால், விதியினால் வருகின்ற துன்பங்களை, அதன் சக்தியை குறைத்துக் கொடுப்பார். இன்னபலனை அநுபவித்துத்தான் தீர வேண்டும் என்று இருக்கும். அதை அநுபவத்திற்கு கொண்டு வந்து தீர்ப்பது, வழிபாட்டின் மூலமாக சுவாமியைக் கும்பிடுவதன் மூலமாக குறைத்துத்தருவார். அந்த வழிபாடு என்பது சிறப்பு வழிபாடு, பொது வழிபாடு என்று இருக்கிறது. அதனால் அந்த சிறப்பான வழிபாடு செய்யும் போது விதியின் சக்தி குறையும். ஒருவனுக்கு 1000 ரூபா நட்டம் வர வேண்டும் என்று விதி இருக்கும். ஆனால் வழிபாட்டினால் அது 100 ரூபாவாகக் குறையலாம். அதே போல், நல்ல பலனும் இவனுக்கு இன்று 1000 ரூபா தான் கிடைக்கும் என்றிருப்பின், வழிபாட்டின் மூலம் அது 2000 ரூபாவாகவோ 10000 ரூபாவாகவோ கிடைக்கலாம். வழிபாட்டுக்குப் பலனுண்டு.

பரமஞானிகளுக்குக் கூட விதி உண்டு. பட்டினத்தார் என்று ஒருவர் இருந்தார். அவர் தனது திரவியத்தையே துறந்துவிட்டு துறவுக்குச் சென்றுவிட்டார். முழுத் துறவியாக மாறிவிட்டார். அவரின் விதி அவரை விடவில்லை.

உண்மையில் நடந்த சம்பவம் என்னவெனில், சில திருடர்கள் திருடச் செல்லும் போது தாம் பிடிபடக் கூடாது என்று பிள்ளையாரை வேண்டிக்கொண்டு சென்றார்கள். பிள்ளையாரின் அருளால் அவர்கள் பிடிபடவில்லை. அவர்கள் திருடிவிட்டு வரும்போது இருட்டில் அவர்களுக்கு ஒன்றும் தெரியவில்லை. தாம் திருடியவற்றுள் ஒரு முத்துமாலையை எடுத்துப் பிள்ளையார் இருக்கும் திசை நோக்கி வீசினார்கள். அங்கே பிள்ளையாருக்கு முன் பட்டினத்தார் இருந்தது அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் எறிந்த முத்துமாலை பட்டினத்தாரின் கழுத்தில் விழுந்துவிட்டது. காலையில் காவலர்கள் வந்து பார்த்த போது, பட்டினத்தாரின் கழுத்தில் மாலை இருப்பதைக்கண்டு அவரை அரசனிடம் அழைத்துச் சென்றனர். அரசன் அவரைக் கழுமரத்தில் ஏற்றும்படி ஆணையிட்டான். கழு மரத்திற்குக் கிட்டக்கொண்டு போனபோது காவலர்கள் “உன்னுடன் வந்த மற்றைய திருடர்கள் எங்கே? உண்மையைச் சொல். இல்லை என்றால் நீ இப்போது சாகப்போகிறாய்.” என்று பட்டினத்தாரைக் கேட்டனர். அவர் உண்மையைச் சொல்கிறார். அனைவருக்கும் அப்போது தான் உண்மை தெரிந்தது. பட்டினத்தார் பரமஞானி. தனது திரவியத்தையே தூக்கி எறிந்துவிட்டு துறவியாகப் போனவர். அவர்

அப்போது,

என் செயலாவது யாதொன்றுமில்லை இனித் தெய்வமே
உன் செயலே என்று உணரப் பெற்றேன் இந்த ஊன்எடுத்த
பின் செய்த தீவினை யாதொன்றுமில்லைப் பிறப்பதற்கு
முன் செய்த தீவினையோ இங்ஙன் வந்து மூண்டதுவே

என்று பாடினார்.

அப்படிப் பாடும் போது இவரை ஏற்ற வைத்திருந்த கழுமரம் நெருப்புப் பிடித்து சாம்பலாக எரிந்துவிட்டது. விதி கொண்டு போனது. ஆனால் அவரின் வழிபாட்டினால், ஞானத்தினால் கழுமரம் சாம்பலானது. விதி தோற்றுவிட்டது. திருவருள் வழிபாடு வெற்றி அடைந்துவிட்டது. அதேபோல் தான் மார்க்கண்டேயருக்கும். இப்படி பல வரலாறுகள் உண்டு. அவர்களின் வழிபாடு அன்பின் காரணமாக, அதனுடைய பலனில் ஏற்றக்குறைவு இருக்கும். வழிபாடு செய்தால் விதியினுடைய தாக்கத்தைக் குறைத்து நன்மையைத் தருவார். அதனால் வழிபாடு செய்ய வேண்டும். விதி ஒன்றுமே செய்யாது. வழிபாடு செய்து விட்டால் தலைவிதிப்படியே நடக்கும். வழிபாடு செய்தால் விதியின் தாக்கம் எமக்குத் தெரியாது. இவன் கீழே விழுவான், கால் ஊனமாகும், துண்டாகும் என்று விதி இருக்கலாம். அவன் வழிபாட்டினால், பிரார்த்தனையால் அவன் கீழே விழுவான், காயம் வரும். நான்கு ஐந்து நாள்களில் சரியாகும். விதியினால் வருவதை திருவருள் குறைத்துக் கொடுக்கும். துன்பத்தைக் குறைத்து இன்பத்தைக் கூட்டிக் கொடுக்கும். எனவே வழிபாடு அவசியம்.

- குளித்தலை இராமலிங்கம்

**வாழை இலையில் அல்லது வாழைச்சருகில் சாப்பிடலாமா?**

தினமும் இலையில் சாப்பிட முயலுங்கள். பொதுவாக இன்று பலர் பயன்படுத்தும் “ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்”, அதாவது எவர்சில்வர் தட்டுகள் இரும்புத்தன்மை உடையவை. எனவே பூசைக் காலங்களில், விரத நாள்களில் அவற்றைத் தவிர்த்து, வாழையிலையில் சாப்பிடுவது சிறப்பெனினும், தற்காலத்தில் நாம் பெரியோர்கள் கூறுவதைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கருதினாலும் நம்மைச் சுற்றி இருக்கக்கூடிய சூழ்நிலையும் நமக்குக் கைகொடுக்க வேண்டும். எனவே வாழையிலை கிடைக்கக்கூடிய இடங்களில் முடிந்த அளவு அதைப் பயன்படுத்துவதே சிறப்பு. கிடைக்காத இடங்களில் தாங்கள் கவலை கொள்ள வேண்டியதில்லை. எப்படி அமைகிறதோ அப்படிப் பயன்படுத்தலாம். தவறில்லை.

**நம் வீட்டில் உள்ள பூசை அறையை, பூசை நேரம் தவிர மற்றைய நேரங்களில் மூடி வைக்க வேண்டுமா? அல்லது என்நேரமும் திறந்து வைத்திருக்கலாமா?**

தூய்மை, தூய்மையின்மையின் பொருட்டே இதை நாம் நிச்சயிக்கலாம். பூசையறையைச் சுற்றி எப்போதுமே தூய்மையாக இருப்பின் காலை திறந்து, இரவு படுக்குமுன் கடவுளை வணங்கிச் சாத்திவிடலாம். தூய்மையைப் பாதுகாப்பதில் ஏதேனும் சிரமம் இருப்பின் பூசை முடிந்தவுடன் சிறது நேரம் கழித்து சாத்திவிடுவதினால் தவறேதும் இல்லை.

**கோயில் குடமுழுக்குச் சமயங்களில் வாங்கிவரும் மண் கலசங்கள், முக்கியமானவர்களின் திருமணங்களில் தரப்படும் சிறு மண் பானைகள் நிறைய உள்ளன. அவற்றுக்கெல்லாம் இப்போது வேலையும் இல்லை. இடத்தையும் அடைக்கின்றன. தோட்டத்தில் வைத்து செடிகளை வளர்க்கலாம் என்று என் கணவர் கூறுகின்றார், அப்படிச் செய்யலாமா? அல்லது வேறு என்ன செய்யலாம்?**

பொதுவாகவே மண் சம்பந்தமான பாத்திரங்களை ஒரு தடவைக்கு மேல் பயன்படுத்துவதில்லை. எனினும் தற்காலங்களில் பலர் பல்வேறுவித சூழ்நிலைகளினால் பயன்படுத்தி வருகிறார்கள். தாங்கள் தங்களுக்கு அளித்த மண்கலயங்களைச் செடிகள் வளர்ப்பதற்குப் பயன்படுத்தலாம்; தவறில்லை.

**பூஜ்யத்திற்கு மதிப்பில்லை என்கிறோம். ஆனால், ஆன்மிகப் பெரியவர்களை "பூஜ்யசிறீ" என்று அடைமொழியிட்டு அழைக்கிறோமே! ஏன்?**

"பூஜ்ய" என்பது மரியாதைக்குரிய என்று குறிக்கப்படுகிறது. எனவே "பூஜ்யசிறீ" எனில் மரியாதைக்குரியவர் என்று புரிந்துகொள்ள வேண்டும். அதுதவிர, தாங்கள் குறிப்பிட்டுள்ள பூஜ்யம், அதாவது சீரோ(0) என்பதற்கு மதிப்பில்லை என்று எவ்வாறு பொருள் கொண்டீர்கள்?

மதிப்பில்லாதது எனின், அனைத்தையும் கடந்த என்ற பொருளும் அடங்கும். எனினும், இல்லற வாழ்க்கையைத் துறந்து தன்னலமில்லா சேவையை மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு செய்துவரும் ஆன்மிகப் பெருமக்களைப் "பூஜ்யசிறீ" என்று குறிப்பிடுவது பொருந்தும்.

நன்றி: "அறிவோம் ஆன்மிகம்" என்ற நூலிலிருந்து தொகுத்தவர் வை. சிவனருட்செல்வர்

# புரியாத புதிர்

யோகி பரமஹம்ச யோகானந்தா தன் உடலைவிட்டு நீங்கும்பொழுது, அவர்முன் 700 பேர் இருந்தனர். அமெரிக்காவில் போஸ்டன் நகரில் அவர் மகாசமாதி அடைந்தார். தான் உடலை விடுமுன்பே, "நான் உடலை விடப்போகிறேன்" என்று அவர் அறிவித்திருந்ததால் விஞ்ஞானிகள், மருத்துவர்கள் எனப் பலர் அங்கே வந்து அமர்ந்திருந்தனர். வந்தவர்களுடன் சிறிது நேரம் பேசிவிட்டு "இப்போது என் உடலை நான் விடப்போகிறேன்" என்று சொல்லிப் பத்மாசனத்தில் அமர்ந்து தன் உடலை நீத்தார். மருத்துவர்கள் எத்தனை சோதனை செய்தாலும் அவர்களுக்குப் புலப்படாத ஒரு விஷயமிது. ஏனெனில், மருத்துவ அறிவைப்பொறுத்தவரை உடலில் ஏதேனும் சிதைவு ஏற்பட்டு, உடல் இயங்க முடியாத நிலையில் மட்டுமே உயிர் பிரியும் என்று நம்பப் படுகிறது. இதயமோ, நுரையீரலோ, வேறு ஏதோ கெட்டுப்போனால் மட்டுமே உயிர் நீங்கும் என்பது அவர்கள் நம்பிக்கை.

நன்றாக, ஆரோக்கியமாக இருக்கும் ஒருவர், "இப்போது நான் போகப்போகிறேன்" என்று சொல்லிவிட்டுத் தன் உடலை நீப்பதை அவர்கள் எங்கும் பார்த்ததில்லை. அதுமட்டுமல்ல. உடலை விடும்போது 33 நாள்களுக்குப் பின்னரே உடலை அடக்கம் செய்யவேண்டும், அழியாத உடலை அப்படியே வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லிவிட்டு உயிர் நீத்தார். உடலில் தேவையான அளவுக்கு வியானப் பிராணாவை அவர் தக்கவைத்துச் சென்றதால் எத்தனை நாளானாலும் உடல் நன்றாக இருக்கும். இதைச் செய்ய அவருக்கு அவசியம் இல்லை. ஆனால் அவர் உயிரோடு இருக்கும்போது காரண அறிவைமட்டுமே பயன்படுத்தும் விஞ்ஞானிகள் அவருக்கு அதிக அளவில் தொல்லை தந்தனர். அவர்களுக்கு விளையாட்டுக் காட்டலாம் என்றே அவர் அவ்வாறு செய்தார். "30 நாள்கள் உடல் அப்படியே இருக்கும், நன்றாகச் சோதனை செய்யுங்கள்" என்று சொல்லி உடலை விட்டுப் போனார். அவரின் உடல் இன்றும் "லொஸ் ஆஞ்சலிஸ்" இல் அழிவின்றி இருக்கிறதாம்.

நன்றி: தமிழும் சித்தர்களும்

# கலைமகள் தரிசனம்



கலைமகளுக்குத் தனிக்கோயில் தமிழகத்தில் திருவாரூர் மாவட்டம் கூத்தனூரில் அமைந்துள்ளது. இது போன்று, பல திருத்தலங்களில் சரஸ்வதிக்குத் தனிச் சந்நிதிகள் உள்ளன. அவற்றில் சிலவற்றைப் பார்ப்போம்.

**அட்சர பீடம் (திருவாரூர்):**

திருவாரூர் தியாகராஜ சுவாமி திருக்கோயிலில் அட்சரங்களே தனிச் சந்நிதியில் கொலுவிருக்கின்றன. இந்த அட்சரங்களை அம்பிகையாக வழிபடுகிறார்கள். கமலாம்பிகையைச் சுற்றி வரும்போது தென்புறம் அட்சரபீடத்தையும் வடபுறம் சரஸ்வதி சந்நிதியையும் தரிசிக்கலாம்.

**வாணியம்பாடி:**

பிரம்மாவின் சாபத்தால் பேசும் சக்தியை இழந்த வாணி, வாணியம்பாடியில் உள்ள அதிதீஸ்வரரையும், பெரியநாயகியையும் பூஜித்து தன்னுடைய குரலை மீண்டும் பெற்றாள். சிவனும், பார்வதியும் வாணிக்கு அருள் செய்ததோடு அவளைப் பாடும்படியும் கூறினர். அதன்படி வாணி அழகாகப் பாடியதால் இவ்வூர் வாணியம்பாடி என்றானது. ஆலயத்தின் முகப்பிலேயே சிவ- பார்வதியைக் கலைவாணி வழிபடும் சுதைச் சிற்பம் உள்ளது. தனிச் சந்நிதியில் வீணை ஏந்திய வாணி அருள்கிறாள். வேலூர் - கிருஷ்ணகிரி சாலையில் இத்தலம் அமைந்துள்ளது.

**உத்தமர் கோயில்:**

திருச்சிக்கு அருகிலுள்ளது. மும்மூர்த்திகளும் தங்கள் பத்தினியரோடு அருள்பாலிக்கும் தலம், பிரம்மாவும், சரஸ்வதியும், தனித்தனிச் சந்நிதிகளில் அருள்பாலிக்கிறார்கள்.

**காஞ்சிபுரம்:**

கைலாசநாதர் கோயிலில் மூன்று இடங்களில் சரஸ்வதி தேவியின் திருவுருவம் உள்ளது. காஞ்சிபுரம் யதோத்காரி பெருமாள் கருவறையில், சொன்னவண்ணம் செய்த பெருமாள் பாதத்தின் அருகில் அமர்ந்தவாறு காட்சி தருகிறாள் கலைமகள். காமாட்சியம்மன் ஆலயத்திலும், கச்சபேசுவரர் கோயிலிலும் சரஸ்வதி சந்நிதிகள் உள்ளன. காமாட்சியம்மன் கோயிலில் எட்டுக் கரங்கள் கொண்ட திருவுருவம் உள்ளது.

**மதுரை:**

மீனாட்சி - சுந்தரேசுவரர் ஆலயத்தில், சுவாமி சந்நிதி பிரகாரத்தில், வடக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது சரஸ்வதி சந்நிதி. அன்னையின் கையில் வீணை இல்லை.

**ராமேஸ்வரம்:**

ராமநாத சுவாமி திருக்கோயிலில் வீணையேந்திய சரஸ்வதி சந்நிதி உள்ளது.

**நாகூர்:**

நாகபட்டினம் அருகிலுள்ள நாகூர் திருத்தலத்தில் ஞான சரஸ்வதியின் செப்புத் திருமேனி உள்ளது.

**திருவிடைமருதூர்:**
சரஸ்வதிதேவி நான்கு தலைகளுடன், வீணையை ஏந்திய நிலையில் திருவிடைமருதூர் மகாலிங்கேஸ்வரர் கோயிலில் வீற்றிருக்கிறார்.

**தாடிக்கொம்பு:**
இத்தலம், திண்டுக்கல்-வேடசந்தூர் சாலையில் 9 கி.மீ. தொலைவில் உள்ளது. சௌந்தரராஜப் பெருமாள் அருள்பாலிக்கிறார். கல்வியை அருளும் தெய்வங்களான ஹயக்ரீவர், சரஸ்வதிக்குத் தனித்தனியே சந்நிதிகள் அமைந்துள்ளன.

**வேதாரண்யம்:**
வேதங்களே ஈசனை வணங்கிய தலம். இக்கோயிலின் பிரகாரத்தில் மிகப்பெரிய சரஸ்வதி வீற்றிருக்கிறாள். கரங்களில் வீணையில்லை. மாறாக, சுவடிகள் உண்டு.

**சேலம்:**
சேலம் மன்னார் பாளையத்தில் சரஸ்வதியின் அம்சமான ராஜமாதங்கி எழுந்தருளியிருக்கிறாள்.

**தஞ்சாவூர்:**
தஞ்சாவூர் ராஜவீதி அரண்மனை வளாகத்தில் மராட்டிய மன்னர் காலத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட சரஸ்வதி ஆலயம் உள்ளது.

**கும்பகோணம்:**
கும்பகோணத்தில் உள்ள பிரம்மன் கோயிலில் பிரம்மா தன் தேவியர்களான சரஸ்வதி, காயத்ரி தேவியருடன் நின்ற கோலத்தில் வேத நாராயணப் பெருமாளிடம் ஆசி பெறும் கோலத்தில் உள்ளார்.

**அரியப்பாக்கம்:**
சென்னை - திருப்பதி நெடுஞ்சாலையில் பெரியபாளையம் பவானி அம்மன் ஆலயத்திலிருந்து சுமார் 1 கி.மீ. தூரத்தில் அரியப்பாக்கம் கிராமத்தில் ஸ்ரீ வித்யாரம்ப ஞான சரஸ்வதி திருக்கோயில் கொண்டுள்ளாள்.

**தொட்டப்பாளையம்:**
வேலூரில் உள்ள தொட்டப்பாளையம் தாரகேஸ்வரர் ஆலயத்தில் கோட்ட தெய்வமான பிரம்மாவிற்கு எதிரில் சரஸ்வதிதேவி அமர்ந்துள்ளாள்.

**திருநெல்வேலி:**
கீழ மாடவீதியில் உள்ள கோமதியம்மன் சந்நிதிக்கு எதிரே கலைவாணிக்குத் தனிக்கோயில் உள்ளது.

**சிருங்கேரி சாரதாம்பிகை:**
கர்நாடக மாநிலம், சிக்மகளூர் மாவட்டத்தில், துங்கபத்ரா நதிக்கரையில், சிருங்கேரி தலத்தில் சந்தன மரத்தாலான சாராதாம்பிகை கோயில் அமைந்துள்ளது.

**நன்றி: -ஸ்ரீபாலா சமஸ்தான சத்சங்க குழு, செம்பாக்கம்**

# ஆன்மீக அதிசயங்கள்

- திருவண்ணாமலையில் ராஜகோபுரம் வழியாகச் சுவாமி வெளியே வருவதில்லை.
- பெருமாள் இடது திருக்கையிலேதான் சங்கு வைத்திருப்பார், திருக்கோவிலூரில் மட்டும் வலதுகையில் வைத்திருக்கிறார்.
- சிதம்பரம் கோயிலில் மட்டுந்தான் ஒரேயிடத்தில் இருந்தே நடராஜப் பெருமானையும் கோவிந்தராஜப் பெருமாளையும் தரிசிக்கலாம்.
- சைவரின் திருவாதிரை நாளும் வைணவருக்குரிய வைகுண்ட ஏகாதசியும் ஒரே மாதத்தில், ஒரே கோயிலில் நடைபெறுவது சிதம்பரத்திலேதான்.
- மூலவரே தேரேறி வீதிவலம் வருவது சித்மபரத்தில் மட்டுமே!
- மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் 16 கோபுரங்கள் உள்ளன. வேறெங்கும் இவ்வளவு கோபுரங்கள் உள்ள கோயில் இல்லை.
- ஆழ்வார் குறிச்சியில் ஒரே கல்லில் உருவாக்கிய நடராஜர் சிலை உள்ளது. இந்தச் சிலையைத் தட்டினால் வெண்கல ஓசை வரும்.
- கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை அருகிலுள்ள கேரளபுரத்தில் சிவன்கோயில் உள்ளது. இங்குள்ள அரசமரத்தடியில் நிறம்மாறும் விநாயகர் இருக்கிறார். ஆவணி முதல் தை வரை வெள்ளை நிறமாகவும் மாசி முதல் ஆடி வரை கறுப்பு நிறமாகவும் இந்த விநாயகர் காட்சியளிக்கிறார். சந்திரகாந்தக் கல்லால் ஆன சிலை என்பதே காரணமாம்.
- குளித்தலை - மணப்பாறை வழியில் ஐவர் மலை என்ற இரத்தினகிரி மலை உள்ளது. இந்த மலைமேல் காகங்கள் பறப்பதில்லை.
- இமயமலைச் சாரலில் உள்ள திருத்தலங்களில் ஒன்று பத்திரிநாத். இங்கு மே மாதம் முதல் வாரத்தில் நடை திறந்து நவம்பர் மாதம் முதல் வாரத்தில் நடை சாத்தப்படும். அப்போது, ஒரு தீபத்தை ஏற்றி வைப்பார்கள். அந்தத் தீபம் அடுத்துக் கோயில் திறக்கும்வரை ஒளி கொடுத்தபடி அணையாது இருக்கும்.
- காசி நகரைச் சுற்றி சுமார் 45 மைல் சுற்றளவில் கருடன் பறப்பதில்லை.
- சென்னிமலை முருகனுக்கு அபிஷேகம் செய்யும் தயிர் புளிப்பதில்லை.
- சமயபுரம் கோயிலில் ஸ்ரீ மாரியம்மன் இருந்தகோலத்தில் காட்சியளிக்கிறார். இத் திருமேனி மூலிகைகளால் ஆக்கப்பட்டது. கர்ப்பக்கிருகத்தில் உள்ள இவ்வளவு பெரியதிருமேனி வேறெங்கும் இல்லை.
- தேனி மாவட்டம் கம்பம் அருகிலுள்ள சுருதி மலைக் குகைக்குத் திருநீற்றுக் குகை என்று பெயர். இங்கே அள்ள அள்ளக் குறையாது திருநீறு கிடைக்கின்றது.

- தொகுப்பு: திருமதி ப குணதாசன்

elakkiaonline.com

**Order at our Sri Lankan and Indian online supermarket delivered to your doorstep**

- Sri Lankan and Indian Vegetables, Groceries
- Frozen Seafood & Fish
- Savoury Snacks
- Ready Meals




**FREE DELIVERY ON ORDERS OVER £40**

*Terms and conditions apply

**Wish you a very happy and prosperous new year**

www.elakkiaonline.com

Follow us on



WESTERN
Jewellers
வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகளை குறைந்த
விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.. உங்கள் வெஸ்டன் ஜுவலர்ஸ்.
SRI LANKAN FIRST JEWELLERY SHOP IN UK
Specialise in 22 ct Gold, White Gold, Platinum
& Diamond Jewellery.
Tooting Branch.
NO : 230
UPPER TOOTING ROAD
LONDON,
SW17 7EW
TEL : 020 8767 3445
Wembley Branch.
5 PLAZA PARADE,
29 -33 EALING ROAD,
WEMBLEY, MIDDX,
HAO 4YA
TEL : 020 8903 0909
SILK
EMPORIUM
TEL : 0208 6721 900
122 UPPER TOOTING ROAD,
LONDON, SW17 7EN.